பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 7 | இதழ் 47 | 23 டிசம்பர் 1969 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

**மாசேதுங் சிந்தனை**

கஷ்டங்களின் போது நமது சாதனைகளை நாம் மறந்து விடக்கூடாது. பிரகாசமான எதிர்காலத்தை எண்ணி, நமது துணிவை வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

# புரட்சிகரத் தலைமையின்கீழ் தொழிலாளர், மாணவர்களின் ஐக்கியத்தை உருவாக்குவோம்

**கடந்த சில வாரங்களாக தொழிலாளர்கள், மாணவர்கள் எழுச்சியில் மேலும் அபிவிருத்திகள் தென்பட்டுவருகின்றன. நாங்கள் இப் போராட்டங்களில் வளர்ந்துவரும் உத்வேகத்தை குறிப்பாக, துறைமுகத் தொழிலாளர்களினதும், பல்கலைக்கழக மாணவர்களினதும் போராட்ட உத்வேகத்தை கௌரவிப்பதோடு, இவை நாட்டில் தீவிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியினதும், உழைக்கும் வெகுஜனங்கள் தமது வாழ்க்கையை நடத்த முடியாமல் அவதிப்படுவதினதும் பிரதிபலிப்பு என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம். தொழிலாளர்களினதும், மாணவர்களினதும் வளர்ந்து வரும் போராட்டம் எதிர்காலப் போராட்டங்களுக்கு உந்துதலை அளிக்கிறது.**

அதே சமயத்தில் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும் எதிராக அரசாங்கம் கையாளும் படுமோசமான அடக்குமுறையை நாங்கள் கண்டித்தேயாகவேண்டும். இரு பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டு, மூன்றுவது பல்கலைக்கழகமும் மூடப்படும் நிலையிலுள்ளது. அதே வேளையில் மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகமும் நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். துறைமுகத்தில் சமசமாஜக் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள ஐக்கிய துறைமுக தொழிலாளர் சங்கமும், ஐக்கிய கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர் சங்கமும் துறைமுகத்தில் நடைபெறும் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவும் சேவைகளோடு, அரசாங்கம் ஆயுதப் படைகளைப் பாவிப்பதன் மூலம் வேலைநிறுத்தத்தை முறியடிக்கும் வழமையான தந்திரத்தைக் கையாள்கிறது.

**குறிப்பு**

டிசம்பர் 21 மாபெரும் மார்க்சிஸ - லெனினிஸவாதியும், மாபெரும் புரட்சியாளருமான தோழர் ஸ்டாலின் நினைவு தினம். அதனையொட்டி உள்ளே ஸ்டாலினைப் பற்றிய கட்டுரைகளும் குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

-ஆர்.

போராட்டத்தின் ஒரு வடிவமான பொருளாதாரப் போராட்டங்கள் நடத்தப்படும்போதுகூட, ஆயுதப் படைகளின் சவாலை எதிர்நோக்கவும், அதனை வெற்றிகொள்ளவும் வேண்டி தனது அங்கத்தவர் ரீதியான ஐக்கியமே தொழிலாளி வர்க்கத்தின் பிரதான ஆயுதங்களில் ஒன்றாகும். ஆனால், தொழிலாளி வர்க்கத்தினுள்ளே ஊடுருவியுள்ள தொழிலாளி வர்க்க எதிர்ப்பு சக்திகளின் சீர்குலைவுச் செயல்களை எதிர்த்துப் போராடுவதன் மூலமும், அதை முறியடிப்பதன் மூலமுமே இதனைச் சாதிக்க முடியும். தற்போது, துறைமுகத்தில் நடைபெறும் வேலை நிறுத்தம், சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பெண்டிஸினதும், அனில்முனசிங்காவினதும் தொழிற் சங்கங்களின் படுகேவலமான கருங்காலித்தனத்தை அம்பலப்படுத்தியுள்ளது. குணசிங்காவினது கருங்காலி அங்கி

வீரத்துடன் போராடி, ஹட்டன் மாவட்டத்திலுள்ள சகல தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவையும் பொது வேலை நிறுத்தம் ஒன்றின் மூலம் பெற்று தமது சகல கோரிக்கைகளையும் வென்றெடுத்தனர். இது புரட்சிகர தொழிற் சங்க நடவடிக்கைக்கு ஒரு உதாரணமாகும். இது போன்று, உத்வேகமிக்க போராட்டங்களினால் மட்டுமே தமது வேலை நிறுத்தப் போராட்டங்களில் வெற்றியடையலாம் என்பதையும் தொழிலாளி வர்க்கம் அறிந்து கொள்ள வேண்டும்.

இரு பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு, மூன்றுவது பல்கலைக் கழகமும் மூடப்படும்

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை

துறைமுகத்தில் ஆயுதப் படைகள் வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் கருங்காலிகளாகப் பயன்படுத்தப்படுவது, சுரண்டும் வர்க்கங்களின் காவல்நாயாக சேவை செய்யும் பொருட்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ள முதலாளித்துவ அடக்குமுறை அரசு யந்திரத்தின் பிரதான வடிவம் ஆயுதப்படைகளே என்று நாம் மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறிய கருத்தை ஊர்ஜிதப்படுத்துகிறது. வெறும் பொருளாதார கோரிக்கைகளுக்காக எனக் கூறப்படும் பொருளாதாரப் போராட்டங்கள் நடத்தப்படும்போதுகூட ஏகாதிபத்தியத்தினதும், முதலாளித்துவத்தினதும் இக் காவல் நாய்களோடு தொழிலாளி வர்க்கம் மோதாது இருக்க முடியாது என்பதை தொழிலாளி வர்க்கம் கற்றுக்கொள்வதற்கு இது ஓர் சந்தர்ப்பம். வர்க்கப் களை அரசியல் ரீதியில் பயிற்றுவிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டுமென்பதை தொழிலாளி வர்க்கம் கற்றுக்கொள்ள வேண்டும். முதலாளித்துவ சுரண்டலைப் பாதுகாக்கின்ற காவல் நாய்களை எதிர்த்துப் போராட கற்றுக்கொள்ளாமல் தொழிலாளி வர்க்கம் சுரண்டல்காரர்களை எதிர்த்து தனித்து போராட முடியாது. இப் பாடத்தை தொழிலாளி வர்க்லம் கற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது,

இரண்டாவதாக, தொழிலாளி வர்க்கம் தம் மத்தியில் மறைந்திருக்கும் துரோகிகளை இனங்கண்டுகொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். முதலாளி வர்க்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஸ்தாபன சமசமாஜக் கட்சியின் தொழிற் சங்கத் தலைமையின் தோள்களில் வீழ்ந்துள்ளது என்பது முற்றுமுழுதாக இன்று நிரூபணமாகிவிட்டது. தொழிலாளி வர்க்கம் தனது லட்சியங்களை அடைய வேண்டுமேயானால், தனது மத்தியிலுள்ள இப்படியான மற்றும் ஏனைய சீர்குலைவு சக்திகளை முறியடித்தாகவேண்டும்.

மூன்றுவதாக, அண்மையில் ஹட்டன் மேபீல்ட் குரூப் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் போது. சகல தொழிலாளர்களையும் தனியொரு போராட்ட முன்னணியில் ஐக்கியப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், பொலிஸின் மிலேச்சத்தனமான அடக்குமுறையை எதிர்த்து

நிலைமைக்கு அடிகோலிய மாணவர் கொந்தளிப்பு, இந்த அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளில் காணப்படும் குளறுபடிகளினதும், பல்கலைக்கழக மாணவர்களைப் பயமுறுத்தும் வளர்ந்துவரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாப்பின்மையினதும் பிரதிபலிப்பேயாகும். மாணவர்கள் சிறந்த போதனை வசதிகளையும், வசதி குறைந்த மாணவர்களுக்கு கூடிய பொருளாதார உதவியையும், அரசியல் உரிமைகளை மீண்டும் அளிக்கும்படியும், பல்கலைக்கழக நிர்வாகத்தில் பங்குபற்றவும் கோருகின்றனர். இக் கோரிக்கைகள் ஏனைய நாடுகளிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அனுப

8-ம் பக்கம் பார்க்க

நம்மைச் சுற்றி ........ நவம்

# கருத்தரங்கில் பாராளுமன்றம்

## தோழர் சண்ணின் வாதத்திற்கு வரவேற்பு

## கொல்வினின் முகத்தில் ஆடிய ஆத்திரம்

சென்ற வாரம் கொழும்பில் ''பாராளுமன்றத்தால் நன்மைபெற முடியுமா?'' என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு கருத்தரங்கு நடந்தது. அதில் தோழர் என், சண்முகதாசன், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, டி. பி. இலங்கரத்தின, கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களில் தோழர் சண்ணைத் தவிர ஏனைய மூவரும் பாராளுமன்றத்துக்கு வக்காலத்து வாங்கி வாதித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர்களான பீலிக்ஸுடனும், இலங்கரத்னவுடனும் சேர்ந்துகொண்டு ட்ரொட்ஸ்கிய சமசமாஜத் தலைவர்களில் ஒருவரும் மேடை நடிகருமான கொல்வின் ஆர். டி சில்வா பாராளுமன்றத்தால் பயனுண்டு என்று வாதிட்டதில் ஒன்றும் புதுமையில்லை. தமது ''புரட்சிகர கர்ஜனை'' களையெல்லாம் மறந்து, அவற்றுக்கெல்லாம் விலகி கொடுத்துவிட்டு, இன்று உலுத்துப்போன முதலாளித்துவ பாராளுமன்றப் பாதையில் மூழ்கிக் கிடக்கும் சமசமாஜத் தலைவர்கள் தம்மைப் போல மக்களையும் ஆக்க முனைந்து நிற்கிறார்கள். அவர்கள் வாயால் என்னதான் சோஷலிஸம் பேசினாலும் அடிப்படையில் சுரண்டும் முதலாளித்துவ அமைப்பையே கட்டிக் காக்க விரும்புகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சம். அதனால் பாராளுமன்றத்திற்கு பாதம் தாங்குகிறார்கள்.

சோஷலிஸம் முதலாளித்துவச் சரக்கு மல்ல, பாராளுமன்றச் சரக்கு மல்ல. அது தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பு. அதனை பாராளுமன்றத்தாலோ, சமாதான வழிகளிலோ கொண்டுவர முடியாது. இந்த உண்மையை கொல்வின் போன்றவர்கள் தமது ''வாதத் திறமை''யினாலோ, வார்த்தை ஜாலங்களினாலோ பொய்யாக்கிட முடியாது.

கொல்வின் தனது பேச்சில், தாம் ஆட்சிக்கு வந்தால், அதனைத் திருத்தி, மக்களுக்கு அதிகம் பயனுடையதாகச் செய்வோம் என்ற தோரணையில் சொன்னார். இதே பல்லவியைத்தான் கருத்தரங்கில் கலந்துகொண்ட இலங்கரத்னவும் கூறினார். இதெல்லாம் எலக்ஸன் பேச்சு. முதலாளித்துவப் பாராளுமன்றம் இவர்களைத் தன் வழிக்குத் திருப்பியிருக்கிறதே தவிர இதனை இவர்கள் தமது வழிக்குத் திருப்பிவிடவில்லை. அதனை இவர்கள் செய்யப் போவதுமில்லை.

பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திறமைசாலிகளைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பினால் அதிக நன்மையை அதனால் பெறலாம் என்றார். அவரின் வாதப்படி அவருட்பட முக்கூட்டணித் தலைவர்கள் கூட திறமையற்றவர்கள் போலும். ஆனால், நாம் அப்படி கருதவில்லை. அவர்கள் எல்லாம் பெரும் அரசியல் விண்ணர்கள் தாம். திறமைசாலிகள்தாம். இதற்கு முன்னும் சரி. இப்போதும் சரி பேச்சில், வாதத்தில், அரசியல் அறிவில் திறமையானவர்களை மக்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், இவர்களின் ''திறமை'' கள் எல்லாம் இன்றைய முதலாளித்துவ பாராளுமன்ற முறையைப் பாதுகாக்கத்தான் பயன்பட்டதே-படுகிறதே தவிர, இன்றையச் சுரண்டல் அமைப்பைத் தகர்த்தெறிந்து விட்டு ஏகாதிபத்திய-நிலப் பிரப்புத்துவ, முதலாளித்துவ அமைப்பை ஒழித்துக் கட்டிவிட்டு தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஒரு அரசையோ, வெகுஜனங்களின் ஜனநாயகத்தையோ, சோஷலிஸத்திற்கான வழியைத் திறக்கவோ எதுவும் செய்யவில்லை. இது மக்கள் தேறிய அனுபவம்.

தோழர் சண் பாராளுமன்றத்தை தோலுரித்துக் காட்டி, அதன் பங்கலோட்டை புட்டுக் காட்டிய போது கொல்வினின் முகம் சுண்டிக் கறுத்துவிட்டது. மக்களுக்கு அதனால் எவ்வித நன்மையும் பெற முடியாது என்பதை தோழர் சண் நிரூபித்துக் காட்டிய போது கொல்வினின் முகத்தைப் பார்க்க வேண்டும்; அசடு வழிந்தது; ஆத்திரமும் அதில் பளிச்சிட்டது. ஆனால், மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் தோழர் சண்ணின் பேச்சை பெரும் கை தட்டலுடன் வரவேற்றது குறிப்பிடத்தக்கது. இலங்கரத்தின, வண்டியை மெல்ல ஓட்டுவதும் பிற்போக்கானது; மிக வேகமாக ஓட்டுவதும் பிற்போக்கானது என்று தோழர் சண்ணின் கருத்தை மனதில் எண்ணிக்கொண்டு ஒரு ஹிண்ட் அடித்தார். ஆனால் தோழர் சண்ணோ, மெதுவாகப் போவதோ, வேகமாகப் போவதோ பிரச்சினையல்ல. மெதுவாகப் போனால்கூட ஆட்சேபனையில்லை. ஆனால், வண்டி பிழையான பாதையில் நிற்கிறது. இது சோஷலிஸத்திற்குப் போகாது என்று பதிலடி கொடுத்த போது பார்க்க வேண்டும் கூடியிருந்தோரின் ஆரவாரத்தை.

★

## தேர்தல் கழுத்தறுப்பு

கொழும்பு மா நகரசபை தேர்தலின்போது முக்கூட்டணியினரிடையே தேர்தல் கழுத்தறுப்புகளும் சகஜமாக நடந்தன. அவற்றில்குறிப்பாக மத்திய கொழும்புதொகுதியை சுற்றி போட்டியிட்ட திரிபுவாத கெனமன் கும்பல் தமது தேர்தல் கூட்டங்களில் கொழும்பு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஹலீம் இஷாக்கை பேசுவதற்கு அழைக்காமல் தேர்தல் நயவஞ்சகத்தை கையாண்டார்கள். விலாசமற்ற சந்தர்ப்பவாத உதிரிகளையெல்லாம் தமது மேடைகளில் ஏற்றிய திரிபுவாதிகள் ஹலீம் இஷாக்கை இருட்டடிப்புச் செய்தது தற்செயலானதல்ல.

ஹலீம் இஷாக் கடந்த பொதுத் தேர்தலின்போது கொழும்பு மத்திய தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அபேட்சகராக போட்டியிட்டவர். இம்முறையும் போட்டியிட இருப்பவர் என தெரிய வருகிறது. ஆதலால், ஹலீம் இஷாக்கை இருட்டடிப்பு செய்வதன் மூலம் தனது கழுத்தறுப்பை கெனமன் கையாண்டுள்ளார். பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க முக்கூட்டணிக்குள்ளே கழுத்தறுப்புகள் தொடர்வதைக் காணலாம்.

★

## சமசமாஜிகளின் துரோகம்

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ள இலங்கை துறைமுக சோஷலிஸ்ட் தொழிலாளர் சங்கம் உட்பட ஏழு தொழிற் சங்கங்களின் கூட்டுத் தலைமையில் நடைபெறும் துறைமுகத் தொழிலாளர்களினதும், லிகிதர்களினதும் வேலை நிறுத்தத்தை சீர்குலைத்து, காட்டிக் கொடுக்கும் அற்பத்தனமான துரோகச் செயலில் சமசமாஜ ட்ரொட்ஸ்கிய வாதிகள் ஈடுபட்டுள்ளார்கள். சமசமாஜக் கட்சி செய்யும் துரோகத்தனம் முதல் தடவையல்ல. இந் நாட்டின் அரசியல் தொழிற் சங்கப் போராட்டங்களை சீர்குலைத்து, காட்டிக் கொடுத்து, கருங்காலித்தனம் செய்ததே சமசமாஜக் கட்சியின் சரித்திரமாகும்.

லங்கா சமசமாஜக் கட்சியின் அனில்மூனசிங்காக்களும், பெண்டிஸ்களும் துறைமுகத் தொழிலாளர்களின் போராட்டத்தை காட்டிக்கொடுக்கும் கருங்காலிச் செயல்களில் ஈடுபட்டபோதிலும், துறைமுகத் தொழிலாளர்கள் உறுதி குன்றாது தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள். யு. என். பி. யின் முப்படைகளுடன் ஒன்றாக ஐக்கியப்பட்டு துறைமுகத்தில் கருங்காலிகளாக சமசமாஜிகள் வேலைசெய்தபோதிலும், வேலை நிறுத்தப் போராட்டத்தின் உத்வேகம் நாளுக்கு நாள் வளர்ச்சி பெறுகிறது. தங்களது பிரதான கோரிக்கையான மாத சம்பளமும், 22மாத மேலதிக நேர பாக்கிப் பணத்தையும் கோரி நடைபெறும் இவ் வேலைநிறுத்தப் போராட்டத்தை இறுதிவரை நடத்துவதற்கு துறைமுகத் தொழிலாளர்கள் மனவுறுதி பெற்று வருகிறார்கள். சமசமாஜிகளின் பொய்ப் பிரச்சாரங்களையும், காட்டிக்கொடுப்பையும் காணும் துறைமுகத் தொழிலாளர்கள் சமசமாஜக் கட்சியின் தலைமை யு. என். பி.யை நோக்கி நடைபோடுகிறது என பகிரங்கமாகவே கூறுகிறார்கள். துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தை சமசமாஜிகள் காட்டிக்கொடுத்தமை, கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் அவர்களின் தோல்விக்கு ஒரு காரணமாகும்.

★


படித்து விட்டீர்களா?

**மகத்தான மாசேதுங் சிந்தனை**

எழுதியவர்:
**தோழர் என். சண்முகதாசன்**
(பொதுச் செயலாளர்
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி)

விலை: 50 சதம்

கிடைக்குமிடம்:
தொழிலாளி பிரசுராலயம்,
121, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.

# சரித்திரம் என்றும் மறக்காத மாபெரும் புரட்சியாளர்



## நவீன திரிபுவாதிகளால் ஸ்டாலின் நினைவை அகற்றவே முடியாது

உலகில் முதல் சோஷலிஸ அரசுக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சுமார் 30 வருடங்களாக தலைமை வகித்த தோழர் ஜே. வி. ஸ்டாலினுடைய வாழ்வையும், சேவையையும் சரியாகத் திரும்பவும் மதிப்பீடு செய்வது அவசியம். இதன்மூலம் தற்போது சோவியத் ஆட்சியை அபகரித்துள்ள நவீன திரிபு வாதத்திற்கு எதிரான எமது போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். இவை இரண்டும் மிக நெருங்கிய சம்பந்தமுடையவை. ஏனெனில், குருஷ்சோவ் தோழர் ஸ்டாலினைத் தாக்கி ரகசிய அறிக்கையொன்றை சமர்ப்பித்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது மாநாடுதான் நவீன திரிபுவாதத்தை நோக்கிய வீழ்ச்சியையும் ஆரம்பித்து வைத்தது. இதே மாநாட்டின் மேடையில் தான் தோழர் ஸ்டாலினின் உயரிய சேவையை குருஷ்சோவ் முதன் முறையாக மறுத்ததோடு, தனது சமாதான சகவாழ்வு, சோஷலிஸத்திற்கான சமாதான மாற்றம் ஆகிய திரிபுவாதக் கொள்கைகளை முதன் முறையாக முன்வைத்தான்.

இத்தொடர்பு மிகத் தெளிவானது. சோவியத் மக்களினதும், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தினதும் நினைவிலிருந்து தோழர் ஸ்டாலினின் புரட்சிகர பிரதிபிம்பத்தை முதலில் அழிக்காமல் குருஷ்சோவினால் மார்க்சிஸம் — லெனினிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் திரித்துக் கூற முடியவில்லை. மார்க்சிஸம்-லெனினிஸத்தின் கோட்பாடுகளைத் தன் வாழ்நாள் முழுவதும் உறுதியாக உயர்த்திப் பிடித்த பெரும் புரட்சியாளரான தோழர் ஸ்டாலினின் நினைவு சோவியத்மக்களின் உள்ளங்களில் இருக்கும்வரையும், குருஷ்சோவினால் தன் திரிபுவாத கருத்துக்களை மறைமுகமாகப் புகுத்த முடிந்திராது. எனவேதான், தோழர் ஸ்டாலினின் பிரதிபிம்பத்தை முதலில் அழிக்க வேண்டியிருந்தது. மேலும் — ஸ்டாலினை மிகக் கேவலமான முறையில் தூற்றி அவரது கல்லறைக்கும் அவமரியாதை செய்து, அவரது உடலைச் சமாதியிலிருந்தும், அவரது பெயரை சோவியத் யூனியனிலுள்ள ஒவ்வொரு நகரிலிருந்தும் அகற்றிய பிறகும்கூட சோவியத் திரிபுவாத கும்பல் தோழர் ஸ்டாலின் ஆவியால் மிரட்டப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர் — ஸ்டாலினுடைய ஆவி என்பது சோவியத் மக்களின் மார்க்சிஸம் — லெனினிஸ மனச்சாட்சியாகும். நவீன திரிபுவாதிகள் 20வது மாநாட்டில் குருஷ்சோவின் பிரசித்திபெற்ற ரகசிய அறிக்கையில் ஸ்டாலினை தாக்கியதோடு திருப்தியடையவில்லை. அவர்கள் 22வது மாநாட்டில் மீண்டும் தாக்கினர். இவையனைத்தும் சோவியத் மக்களின் உள்ளத்திலிருந்து தோழர் ஸ்டாலினை இவர்கள் அகற்றுவதனால் ஏற்படக்கூடிய எதிர்ப்புக்கும் கஷ்டங்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியிருந்ததைக் காண்பித்தன.

### ஸ்டாலினது புரட்சிகரச் சாதனைகள்

இக்காரணங்களால் தான் மார்க்சிஸம் — லெனினிஸத்தின் தூய்மையைப் பாதுகாக்க முயல்பவர்களுக்கு தோழர் ஸ்டாலினை பற்றியஒரு சரியான மதிப்பீடு அவசியமாகிறது.

தோழர் ஸ்டாலின் ஒரு மாபெரும் புரட்சியாளரும், ஏகாதிபத்தியத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் எதிரான தளராத ஒரு போராளியுமாவார். முதலாவது சோஷலிஸ அரசில் சோஷலிஸத்தைக் கட்டி வளர்ப்பதற்கு வெற்றிகரமாகத் தலைமை தந்தவரும், அதை, உலக பாசிஸத்தின் எதிர்ப் புரட்சித் தாக்குதலுக்கு எதிராக வெற்றிகரமாகப் பாதுகாத்துவரும் அவரே.

ஜாராட்சியின் இருண்ட காலத்தில்தான் ஸ்டாலின் புரட்சியில் சேர்ந்தார். அக்காலத்தில் புரட்சியாளனுகை இருப்பதென்றால் கைதாக்கப் படுவதற்கும், சைபீரியாவுக்கு நாடுகடத்தப்படுவதற்கும் உள்ளாவதாகும். தோழர் ஸ்டாலின் பலதடவை சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டார். ஆரம்பம் முதல் அவர் தோழர் லெனினேடு இணைந்து போல்ஷ்விக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரானுர். தோழர் லெனின் வெளிநாடுகளில் தலைமறைவாக வாழ்ந்து கொண்டு இயக்கத்திற்குத் தனது ஒப்புயர்வற்ற தத்துவ வழிகாட்டலைத் தந்துகொண்டிருந்த காலத்தில் தோழர் ஸ்டாலின் ருஷ்யாவுக்குள்ளே ஸ்தாபன இழைகளை ஒன்றுகச் சேர்த்துப் பிணைக்கும் கடினமான, அத்தியாவசியமான வேலையில் ஈடுபட்டிருந்தார். அவர் தன்னை, மிகத் திறமைவாய்ந்த ஸ்தாபன அமைப்பாளர் என்பதையும், அனுபவமிக்க ரகசிய ஊழியர் என்பதையும் நிருபித்துக் கொண்டார். போல்ஷ்விக் கட்சிக்கு அஸ்திவாரமிட்ட போல்ஷ்விக்குகளின் 1912ம் ஆண்டு பிராக் மாநாட்டில் அவர் தோழர் லெனினேடு சேர்ந்து பங்குபற்றினுர். சில நாட்களுக்குப் பின்னர், அதே வருடத்தில் ட்ரொட்ஸ்கி, லெனினிஸ — விரோதக் கோஷ்டிகள் அனைத்தையும் திரட்டித் தனது ஆகஸ்ட் கோஷ்டி மாநாட்டை நடத்தினுன். அக் காலகட்டத்திலிருந்து தோழர் ஸ்டாலின் தோழர் லெனினின் மிக நெருங்கிய ஆதரவாளராக வேலைசெய்தார்.

### அக்டோபர் புரட்சியின் தலைவர்

ஜாரை வீழ்த்திய 1917ம் ஆண்டு பெப்ரவரி புரட்சிக்கு சற்றுப் பின்னர், லெனின் வெளிநாட்டிலிருந்துருஷ்யாவுக்குத் திரும்புவதற்கு முன்பாக தோழர் ஸ்டாலின் சைபீரியாவிலிருந்து ருஷ்யாவுக்குத் திரும்பிய மறுநாள் தோழர் லெனின் பிரகடனம் செய்த பிரபல்யமிக்க ஏப்ரல் கொள்கைக்கு முதலில் ஆதரவு கொடுத்தவர்களில் தோழர் ஸ்டாலினும் ஒருவர். அதன் பின்னர் அவர் லெனினுடைய தலைமையின் கீழ் புரட்சிக்கான தயாரிப்புகளில் ஒரு முக்கிய பங்கை வகித்தார். தோழர் லெனின் தலைமறைவாய் வாழ்ந்தபோது, 1917ம் ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்றதும், எதிர்வரும் புரட்சிக்குத் தயாரிப்புகள் செய்ய முடிவு எடுத்ததுமான போல்ஷ்விக் கட்சி மாநாட்டின் நடவடிக்கைகளை தோழர் ஸ்டாலின் நிர்வகித்து நடத்தினுர். இம் மாநாட்டில்தான் அதாவது, அக்டோபருக்கு இரு மாதங்களுக்கு முன்புதான் ட்ரொட்ஸ்கி போல்ஷ்விக் கட்சியின் அங்கத்தவனுக அனுமதிக்கப்பட்டான். தோழர் ஸ்டாலின் புரட்சியை நடத்திய புரட்சிகர ராணுவக் கமிட்டியின் செயலாளராக இருந்தார்.

புரட்சிக்குப் பின்னர் அவர் தேசிய இனங்களுக்கான மக்கள் கொமிஸாராக நியமிக்கப்பட்டார். உள்நாட்டு யுத்தம் நடந்த நெருக்கடியான காலத்தில் திறமைமிக்க தலைமை தேவைப்பட்ட பிரதான முனைகளுக்கு ஸ்டாலினைத்தான் தோழர் லெனின் விசேஷமாக அனுப்பி வைத்தார். தனக்குத் தரப்பட்ட பணிகளையெல்லாம் தோழர் ஸ்டாலின் புகழுடன் செய்து முடித்தார்.

### லெனினது பணியைத் தொடர்ந்தார்

தோழர் லெனினுடைய வாழ்நாளிலேயே லெனின் துப்பாக்கி சூடுகளினுல் படுத்த படுக்கையாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்ட பின்னர், 1922ம் ஆண்டில் தோழர் ஸ்டாலின் போல்ஷ்விக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1924ல் தோழர் லெனின் இறந்த பின்னர் நடந்த முதலாவது கட்சி மாநாட்டில் தானே பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட வேண்டுமெனக் கோரிய ட்ரொட்ஸ்கியின் ஒரேயொரு வாக்கு மட்டும் எதிராக இருந்தது. மற்றப் பிரதிநிதிகள் அனைவரும் தோழர் ஸ்டாலினுக்கு சாதகமாக வாக்களித்து அவரை பொதுச் செயலாளர் பதவிக்கு மீண்டும் தெரிவு செய்தனர். தோழர் ஸ்டாலின் வேலை செய்யும் முறைகளை பற்றிய சில கண்டனங்களை உள்ளடக்கிய தோழர் லெனினின் பிரபல ''மரண சாஸனம்'' வாசிக்கப்பட்டு பிரதிநிதிகள் அதைக் கேட்ட பின்னர்தான் இதுவும் நடந்தது.

மகத்தான சீன கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியதுபோல், ''லெனினின் வாழ்நாளில் தோழர் ஸ்டாலின் ஜாரிஸத்தை எதிர்த்துப் போரிட்டார். மார்க்சிஸத்தைப் பரப்பினுர். லெனினின் தலைமையிலிருந்த போல்ஷ்விக் கட்சியின் மத்திய கமிட்டியின் ஒரு அங்கத்தவரானதன் பின்னர், அவர் 1917ம் ஆண்டு புரட்சிக்கு வழியை உருவாக்குவதற்கான போராட்டத்தில் பங்குபற்றினுர்; அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் அவர் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பயன்களைப் பாதுகாக்கப் போரிட்டார்.

தோழர் லெனினுடைய மரணத்திற்குப் பின்பு உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளுக்கு எதிராக உறுதியுடன் போராடுவதிலும், உலகின் முதலாவது சோஷலிஸ அரசைப் பாதுகாப்பதிலும், ஸ்திரப்படுத்துவதிலும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும், சோவியத் மக்களையும் தோழர் ஸ்டாலின் வழிநடத்தினுர்.

சோஷலிஸ கைத்தொழில் மயமும், விவசாய கூட்டுமயமுமான கொள்கையை உயர்த்திப் பிடிப்பதிலும், சோஷலிஸத்திற்கு மாறுவதிலும், சோஷலிஸ நிர்மாணத்திலும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும், சோவியத் மக்களையும் தோழர் ஸ்டாலின் வழிநடத்தினுர்.

பாசிஸ — விரோத யுத்தத்தின் போது தோழர் ஸ்டாலின் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும், சோவியத் மக்களையும், சோவியத் செஞ்சேனையையும் மிகக் கடினமானதும், கடூரமானதுமான ஒரு போராட்டத்தினுாடாக மகத்தான வெற்றிக்கு வழி நடத்தினுர்.

பல்வேறுவிதமான சந்தர்ப்பவாதங்களுக்கும், லெனினிஸத்தின் விரோதிகளான ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கும்,

7-ம் பக்கம் பார்க்க

### ஸ்டாலின் மீது லெனினுக்குள்ள அக்கறை

சில நாட்கள் ஸ்டாலினைப் பற்றி செய்தி வராவிட்டால் லெனின் அமைதியை இழப்பார். 1913 மார்ச்சில் எழுதிய கடிதத்தில் ''வாஸ்லினி (ஸ்டாலின்)யைப் பற்றி ஒரு செய்தியுமில்லை. ஏன்? அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டதா? எங்களுக்கு கவலையாக இருக்கிறது'' என்று லெனின் எழுதினுர். இரண்டு நாட்களுக்குப் பிறகு எழுதிய கடிதத்தில் ''அவரை (ஸ்டாலின்) கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். மிகவும் சுகக் கேடுற்றிருக்கிறர்'' என்று லெனின் குறிப்பிட்டார்.

# சோஷலிஸ யுகத்

# உருவாக்கிய மகாபு



மகத்தான மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டும் உலகப் புரட்சிகர இயக்கத்தினதும், பாட்டாளி வர்க்கத்தினதும், தலைவராகவும் விளங்கிய தோழர் ஸ்டாலின் மறைவை ஒட்டி, இன்றைய யுகத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டான தோழர் மாசேதுங் 1953ல் ''மகத்தான நட்பு'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளது. -ஆர்.

நமது காலத்திலே மிகச் சிறந்த விவேகியும், உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரதான ஆசிரியரும், வழிகாட்டியும், என்றும் அழியா புகழ் பெற்ற லெனினுடன் தோளோடு தோள் நின்று பணியாற்றியவருமான தோழர் விஸ்ஸாரிபோனேவிச் ஸ்டாலின் நம்மிடமிருந்து நிரந்தரமாக பிரிந்து விட்டார்.

## அபார சாதனைகளுக்கு நன்றி

தோழர் ஸ்டாலினுடைய கோட்பாடுகளும், அவருடைய சாதனைகளும் நமது காலத்திற்கு அளவிட முடியாத நன்கொடைகளாகும். தோழர் ஸ்டாலின் முற்றிலும் ஒரு புதிய சகாப்தத்தை அமைத்திருக்கிறார்; அதாவது சோஷலிஸ சகாப்தத்தை உருவாக்கியிருக்கிறார். சோவியத் மக்களுக்கும் குறிப்பாக சகல நாடுகளின் பாட்டாளி மக்களுக்கும் சாதகமாக சர்வதேச நிலைமையை முற்றிலும் மாற்றியமைக்கும் படியான ஸ்டாலினுடைய அபார சாதனைக்காக அவருக்கு நமது நன்றி என்றென்றும் உரியதாகும். சமூக நீதிக்காகவும், மக்கள் ஜனநாயகத்திற்காகவும், இன்ப சோஷலிஸத்திற்காகவும் நடத்தப்பட்ட போராட்டம், இன்று உலக ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியில் - அதாவது 80 கோடி மக்களுக்கு மேலாக வாழும் பகுதியில் வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறது. இந்த வெற்றியுடைய சக்தியானது இவ்வுலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது.

தோழர் ஸ்டாலினுடைய மரணம், உலக முழுவதிலுமுள்ள ஒப்பிட முடியாத பெரும் துக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இந் நிகழ்ச்சி உலகிலுள்ள நேர்மையான மனிதர்கள் அனைவரினதும் உள்ளத்தில் ஆழப் பதிந்து தவிர்க்க முடியாத சோகத்தை ஏற்படுத்தி விட்டது. தோழர் ஸ்டாலினுடைய வாழ்க்கையின் நோக்கங்களும் அவருடைய மூலக் கருத்துக்களும் உலகம் முழுவதிலுமுள்ள பெரும்பாலான வெகுஜனங்களில் எவ்வாறு இறுகப் பிணைந்திருக்கின்றன என்பதும், பின்பு அவை, யாராலும் வெல்ல முடியாத சக்தியாக எவ்விதம் வளர்ந்திருக்கின்றன என்பதும் மிகத் தெளிவாக காட்டப்படுகின்றது. ஆனால் அதே சமயத்தில் இவ்வாக்க சக்தி மேலும் எதனை செய்கின்றது? பழமையில் மூழ்கி, மக்களுக்கு கேடு விளைவிக்கும் பிரதிநிதிகள் அடங்கிய முதலாளித்துவ பிடியில் சிக்கி அதன் காலடியில் நசுக்கப்பட்டு துன்பப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் எல்லாப் பாட்டாளி மக்களுக்கும் விடுதலை வேண்டாமா? ஆகவே அந்த மக்களது எதிரிகளின் மேல் வலிமை வாய்ந்த ஒரு போராட்டத்தைத் தொடுப்பதற்கு- அவ்வெதிரிகளை அழித்தொழிப்பதற்கு - அச் சக்தி தலைமை தாங்கிச் செல்கின்றது.

## தோழர் லெனினின் நெருங்கிய சகா

மாபெரும் ஒக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் போது, தோழர் ஸ்டாலின் மாமேதை லெனினுடன் தோளோடு தோள் நின்று போராடி வெற்றி பெற்று உலகிலேயே முதன் முதலாக ''முதல் சோஷலிஸ நாட்டை'' அமைத்தார். அப்படி அமைக்கப்பட்ட அந்த நாட்டிலே சோவியத் மக்கள், லெனினுடைய மறைவுக்கு பின்பு தோழர் ஸ்டாலினுடைய தலைமையின் கீழ் பிரகாசமான- ஒளிவீசுகின்ற சோஷலிஸ சமுதாயத்தை கட்டி வளர்த்தார்கள்.

சோவியத் யூனியனில் ஏற்படுத்தப்பட்ட சோஷலிஸ சமூக அமைப்பின் வெற்றியானது சோவியத் மக்களுக்கு மட்டும் தனியாக ஏற்பட்ட வெற்றியல்ல. உலகில் உள்ள பாட்டாளி மக்கள் அனைவருக்கும் ஏற்பட்ட பொதுவான சோஷலிஸ வெற்றியாகும். இந்த வெற்றி இரண்டு முக்கியமான அம்சங்களை அளித்திருக்கின்றது. முதலாவது: சோஷலிஸ சமூக அமைப்பில் ஏற்பட்ட வாழ்க்கையானது ''மார்க்சிஸம்-லெனினிஸம் நடைமுறையில் சரியாக அமைந்துள்ளது என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கின்றது. உலக தொழிலாளி வர்க்கம் இன்பமயமான எதிர்கால வாழ்க்கையை அடைவதற்கு எவ்விதம் முன்னேறிச் செல்லவேண்டும் என்பதை உறுதியாக அறுதியிட்டுப் போதிக்கின்றது; இரண்டாவதாக: இவ் வெற்றியானது, இரண்டாவது உலக மகா யுத்தத்திலே மிருக வெறி பிடித்த பாசிஸத்தை மனித சமுதாயத்தினால் ஒழிக்க முடியும் என்பதை வெள்ளிடைமலையாக உணர்த்திற்று. ஐக்கிய சோவியத் சோஷலிஸ குடியரசு ரஷ்யாவில் சோஷலிஸ சமுதாய அமைப்பில் வெற்றி அடைந்திருக்காவிட்டால் இரண்டாவது உலக யுத்தத்திலே பாசிஸத்தை எதிர்த்து வெற்றி கண்டிருக்க முடியாது. ரஷ்ய சோஷலிஸ சமுதாய அமைப்பின் வெற்றியை நினைத்துப் பார்க்காமல் இரண்டாவது உலக யுத்தத்திலே பாசிஸத்தை எதிர்த்து வெற்றி அடைந்திருக்கக் கூடும் என்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியாதிருக்கிறது.

ஐக்கிய சோவியத் சோஷலிஸ்ட் குடியரசில் ஏற்படுத்தப்பட்ட சோஷலிஸ சமூக அமைப்பின் வெற்றியும், பாசிஸத்தை எதிர்த்த யுத்தத்திலே பெற்ற வெற்றியும் மனித சமுதாயத்தினது வாழ்க்கையின் விதியை நிர்ணயிப்பதற்கு நேரடியான நடவடிக்கைகளை எடுக்கும்படி செய்து விட்டன. இம் மகத்தான வெற்றிகளின் புகழ் முழுமையும் உரிமையுடன் ஒருவரைத் தான் சாரும். அவர்தான் மாமேதை தோழர் ஸ்டாலின்.

தோழர் ஸ்டாலின் மார்க்சிஸ — லெனினிஸ தத்துவங்களை ஜீவனுள்ள இலக்கிய வடிவமாகவும், முத்துக் கோர்வையாகவும் தொகுத்து, பற்பல கோணங்களிலும் விவரித்துள்ளார். மார்க்சிஸத்தின் வளர்ச்சியிலே புதியதொரு கண்ணோட்டத்தை ஆரம்பித்து வைத்தார். லெனினுடைய கோட்பாடுகளையும், கொள்கைகளையும், எந்த நாட்டிலும் சோஷலிஸ கோட்பாடுகளுடன் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும், அதில் வெற்றியும் காண முடியும் என்ற கருத்தையும் தோழர் ஸ்டாலின் புதிய

# ஸ்டாலினுடைய ச

திருஷ்டியுடன் உறுதிப்படுத்தி உருவாக்கியிருக்கிறார். சோவியத் ரஷ்யாவில் பொதுவாக முதலாளித்துவத்தை அழிக்கும்படியான நிலைகளையும், கம்யூனிஸத்தை அமைப்பதற்கு ஏதுவான நிலைகளையும் ஏற்படுத்தி அதற்குப் புத்தம் புதிய ஜீவசக்தியை நமக்கு தோழர் ஸ்டாலின் அளித்துள்ளார். ''தற்கால முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதாரச் சட்டங்களையும்'' சோஷலிஸ பொருளாதாரத்தின் அடிப்படை விதிகளையும் தீவிரமாக பரிசீலனை செய்து, அவற்றில் உள்ள உண்மை நிலைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். காலனி நாடுகளிலும், அரை — காலனி நாடுகளிலும் மக்கள் புரட்சிக்கு அனுகூலமான உண்மையான கருத்துக்களைத் தந்துள்ளார். மேலும் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்காக, லெனினுடைய வளமிக்க கருத்துக்களையும் கோட்பாடுகளையும் பரப்புவதற்காக பாடுபட்டார். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, உலகம் முழுவதிலும் உள்ள பாட்டாளி மக்களும், அடக்குமுறைக்குள்ளாகி அவதியுறும் இதர பகுதி மக்களும் ஒன்றுபட வேண்டும். ஏன்? உலகிலுள்ள தொழிலாள வர்க்கமும், முதலாளித்துவத்தினால் ஜீவாதார உரிமை இழந்து, நசுக்கப்பட்டிருக்கும் ஒடுக்கப்பட்ட இனங்களின் எழுச்சியும் தான் முதலாளித்துவப் பிடிப்பிலிருந்தும், ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்தும் மனித வர்க்கத்தினுடைய விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், எதிர்கால சுபிட்ச வாழ்வை அடைவதற்காகவும் புரட்சிகர போராட்டத்தை அணிவகுத்து நடத்தக்கூடிய மக்கள் சக்தியாகும். இவ் வரிய வாய்ப்புக்கு உதவியாக புரட்சிகர போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற மக்களும், வெற்றிப் பாதையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் மக்களும் தோளோடு தோள் இணைந்தால்தான் போராட்டத்தின் லட்சியங்களை பெற முடியும் என்பதை தோழர் ஸ்டாலின் பாட்டாளி வர்க்கத்தினுடைய இதயத்திலே மகோன்னத லட்சியமாக ஆழப் பதித்து அணையா வெற்றிச் சுடரை ஏற்றிவிட்டார்.

## ஸ்டாலின் அளித்த பரிசு

தோழர் ஸ்டாலினுடைய எல்லாப் பணிகளும் மார்க்சிஸத்திற்கு அவர் அளித்த என்றும் அழியாத நிரந்தரப் பரிசாகும். அவரது ''லெனினிஸத்தின் அடிப்படை அம்சங்கள்'' ''சோவியத் ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரம்'' (போல்ஷிவிக்ஸ்) ஆகியன அவருடைய சிறந்த நூல்களாகும். அவருடைய கடைசி நூலான ''ஐக்கிய சோவியத் ரஷ்யாவிலே சோஷலிஸத்தின் பொருளாதார பிரச்சினைகள்'' எனும் நூல் மகத்தானது. இவையெல்லாம் மார்க்சிஸம் — லெனினிஸம் ஆகியவற்றின் வழி நூல்களஞ்சியங்களாக அமைந்துள்ளன. அது மட்டுமல்ல, இவை, கடந்த நூற்றுண்டுகளில் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய அனுபவங்களின் பொது விதிகளுக்கேற்ற நிர்ணயிப்புகளுக்கு மூலக் களஞ்சியங்களாகவும் இருக்கின்றன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 19வது காங்கிரஸில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு, உலகிலுள்ள எல்லா கம்யூனிஸ்டுகளுக்கும் கொடுத்துச் சென்ற சிறந்த பெரும் பொக்கிஷமாகும்.

தோழர் ஸ்டாலினை வாழ்த்துவது, ஏதோ ஒரு சம்பிரதாயத்துக்காக அல்ல. தோழர் ஸ்டாலினை வாழ்த்துவது என்றால், அவரையும் அவரது லட்சியத்தையும் ஆதரிப்பது என்று அர்த்தமாகும்; சோஷலிஸத்தின் வெற்றியையும் அவர் சுட்டிக் காட்டுகின்ற மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கான முன்னேற்றப் பாதையையும் ஆதரிப்பதென்று அர்த்தமாகும். மனித வர்க்கத்தின் மிகப் பெரும்பான்மையினர் இன்று துன்பத்தில் உழலுகின்றனர். ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டிய பாதையில் செல்வதன் மூலமும் அவருடைய உதவியின் மூலமுமே அத் துன்பங்களிலிருந்து மனித வர்க்கம் தன்னை மீட்டுக் கொள்ள முடியும்.

—மா சேதுங்

# ...த்தை

# ...புருஷர்

சீன கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள், உலகிலுள்ள கம்யூனிஸ்டுகள் என்ற உரிமையில் ஸ்டாலினுடைய மகோன்னதமான வேலைகளையும், சாதனைகளையும் கவனித்து, அதனைப் பின்பற்றி சாதிக்கும் எங்களுடைய உயர்ந்த வேலைகளில் வெற்றிக்கான வழிகளைக் காண்கின்றோம்.

### கேந்திர உருவம்

லெனினுடைய மறைவுக்குப் பின்பு, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கேந்திர உருவமாக — மத்திய தலைவராக தோழர் ஸ்டாலின் எப்பொழுதும் விளங்கிக்கொண்டிருந்தார். நாம் அவரைச் சுற்றித் திரண்டு, அவர் காட்டிய வழியிலே ஒன்றுபட்டு, அடிக்கடி அவரிடமிருந்து யோசனைகளைக் கேட்டு அதன்படி நடந்தும், அவ்வப்போது அவருடைய அனுபவ சாதனைகளின் மூலம் வந்த சிந்தனையின் விஞ்ஞான பலத்தையும் பெற்றுக்கொண்டோம். கிழக்குத் திசையிலே வாழும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும், தங்கள் புதுவாழ்வை நோக்கி முன்னேறவேண்டும் என்ற இயற்கையான அவாவினால் உந்தப்பட்டு அவர்கள் மீது ஒரு அலாதியான — தனி அன்பை வைத்திருந்தார். ஒக்டோபர் புரட்சிக்குப் பிறகு



தோழர் ஸ்டாலினை இழந்துவிட்டோம். இது ஓர் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். இந்த மாபெரும் நஷ்டத்தினால் நம்முடைய தாங்கொணாத் துக்கத்தை எடுத்துச் சொல்ல வார்த்தைகளைத் தேட முடியாத அளவில் திகைக்கின்றோம். இத் துன்பத்தை ஒரு சக்தியாக மாற்றுவது நமது கடமையாகும்.

நமது மாபெரும் ஆசிரியரான தோழர் ஸ்டாலினுடைய நினைவை பாதுகாத்துக் கொண்டு, சீன கம்யூனிஸ்ட் கட்சியும், சீன மக்களும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடனும், சோவியத் மக்களுடனும் உறுதியாய் இணைந்து, ஸ்டாலின் என்ற நாமத்தால் பெற்றிருக்கிறது. சீன மக்கள் புரட்சி சரித்திரப் பிரசித்தி பெற்ற வெற்றியை அடைந்திருக்கிறது. மக்களுடைய ஜனநாயக இயக்கங்களும் அவற்றின் வளர்ச்சியிலே மாபெரும் வெற்றிகளைப் பெற்றிருக்கின்றன. உதாரணமாக, அடக்குமுறைக்கு உள்ளாகி அவதிப்பட்டுக்கொண்டிருந்த பாட்டாளி வர்க்கமும், முதலாளித்துவப் பிடிப்பிலிருந்தும் ஏகாதிபத்தியப் போர்களிலிருந்தும் மனித வர்க்கத்தின் விடுதலையை விரும்பும் மக்களும், ஜனநாயக, முற்போக்கு இயக்கங்களும் தங்களுடைய துன்பங்களை துடைத்துக்கொண்டு முன்னேறிவிட்டன. இவ்விதமாக வளர்ந்த நமது இரு நாட்

# சாதனைகள் மகத்தானவை

''கிழக்கை ஒருபோதும் மறந்துவிடாதே'' என்பதே தோழர் ஸ்டாலினுடைய அறைகூவலாகும்.

தோழர் ஸ்டாலின் உற்சாகத்துடன் சீன மக்களை நேசித்தார். சீன மக்களின் புரட்சிப் படைகள் எல்லாம் நம்பத்தகாத அளவில் மிகப் பெரிதாக இருந்தன என்று அவர் கருதினார். இது யாவரும் சர்வ சாதாரணமாக அறிந்ததே. சீனப் புரட்சியைப் பற்றிய விஷயங்களை அவர் தன் மேதாவிலாசத்தினால் வெளிப்படுத்தினார். லெனின், ஸ்டாலின் ஆகியோரது போதனைகளை பின்தொடர்ந்தும், மிகப் பெரிய சோவியத் நாட்டின் உதவியைப் பெற்றும் சகல நாடுகளிலும் உள்ள புரட்சிகர சக்திகளின் அனுதாபத்தை பெற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும், சீன மக்களும் சில வருஷங்களுக்கு முன்பாக சரித்திரப் பிரசித்திபெற்ற வெற்றியை அடைந்தனர்.

இன்று நாம், நமது சோஷலிஸ தந்தையும், ஆசிரியரும், தலைசிறந்த நண்பருமான வெற்றிச் சுடர் ஏற்றபட்ட நமது மகத்தான நட்பை எல்லையற்ற காலத்திற்கு பிரிக்க முடியாத அளவில் பலப்படுத்த வேண்டும்.

சீன கம்யூனிஸ்டுகளும், சீன மக்களும் இன்னும் அதிகமான அளவுக்கு சோர்வின்றி விடா முயற்சியுடன் தோழர் ஸ்டாலினுடைய போதனைகளையும், சோவியத் விஞ்ஞானத்தையும், தொழில் அபிவிருத்தியையும் பற்றிய நுண்கலைகளையும், நவீன விஞ்ஞானத்தையும் நமது நாட்டில் வளர்ப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக தோழர் ஸ்டாலினுடைய போதனைகளும், சோவியத் யூனியனின் சோஷலிஸ சமூக அமைப்பின் உதாரணங்களும் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு மிகப் பெரும் அளவில் விரைந்து செல்வதற்கும் பின் தொடர்வதற்கும் எளிதாக இருக்கின்றன.

### மகத்தான சக்தி

இன்று சோவியத் யூனியன் வலிமை படைத்த சக்தியைப் டினது மக்கள் சக்தியின் முன் ஏகாதிபத்திய வெறியர்கள் அஞ்சி ஓடிவிடுவார்கள்; அந்த ஏகாதிபத்திய பிடிப்பிலிருந்து நாம் விடுதலை பெற முடியும் என்று கூறுவதற்கு சரியான அனுபவ காரணங்களுடன் கூடிய உரமுள்ள சர்வஜன சக்தியாக வளர்ந்திருக்கின்றோம். மேற்கூறிய இத்தனை வெற்றிகளுக்கும் காரணம் சோவியத் யூனியனின் பலமிக்க சக்தியே ஆகும். எந்த விதமான ஏகாதிபத்திய யுத்தத்தையும் நம்மால் அழிக்க முடியும். நம்முடைய கோபத்தைக் கிளறும் (சோஷலிஸத்தை அழிக்க நினைக்கும்) எதிரிகள் முடிவில் தோல்வியைத்தான் அடைவார்கள்.

சீன மக்களினதும் சோவியத் யூனியன் மக்களினதும் உயர்ந்த நட்பு அசைகக் முடியாத மகத்தான நட்பாகும். ஏனெனில் அது மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் சர்வதேசிய மகோன்னதமான மூல தத்து

6-ம் பக்கம் பார்க்க

# லெனின் மறைவுக்குப் பின் ஸ்டாலின் சபதம்

**1924**ல் லெனின் உயிர்நீத்த சில நாட்களில் சோவியத் யூனியனின் இரண்டாவது சோவியத் மகாசபை கூடியது. அந்தக் கூட்டத்தில் பொல்ஷிவிக் கட்சியின் சார்பில் தோழர் ஸ்டாலின் பின்வருமாறு சபதம் எடுத்துக்கொண்டார்.

''கம்யூனிஸ்டுகளாகிய நாம் விசேஷ வார்ப்பில் எடுக்கப்பட்டவர்கள். மகத்தான தொழிலாளி வர்க்கப் போர்த் தந்திரியான தோழர் லெனின் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் நாம். இந்தச் சேனையைச் சேர்ந்தவரென்ற கௌரவத்தை விடப் பெரிய கௌரவம் கிடையாது. தோழர் லெனின் ஸ்தாபித்துத் தலைமைதாங்கிய கட்சியின் அங்கத்தினர் என்ற பெருமையைவிட உயர்ந்த பாக்கியம் கிடையாது .... ''

''கட்சி அங்கத்தினர் என்ற நற்பெயரின் தூய்மையை உயர்த்திப் பாதுகாக்க வேண்டுமென்று, நம்மை விட்டுப் பிரிந்த தோழர் லெனின் அவர்களே! இந்த கட்டளையை போற்றுதலுக்குரிய முறையில் நிறைவேற்றுவோமென்று உங்களுக்கு உறுதி தருகிறோம்.''

''நமது கட்சியின் ஐக்கியத்தை கண்ணின் கருமணி போல காப்பாற்ற வேண்டுமென்று, நம்மை விட்டுப் பிரிந்த தோழர் லெனின் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். தோழர் லெனின் அவர்களே! இந்தக் கட்டளையையும் பெருமைக்குரிய முறையில் நிறைவேற்றுவோமென்று உங்கள் முன் சபதம் எடுக்கின்றோம்........''

''தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் காப்பாற்றிப் பலப்படுத்த வேண்டுமென்று, நம்மை விட்டுப் பிரிந்த தோழர் லெனின் நமக்கு கட்டளையிட்டார். தோழர் லெனின் அவர்களே! இந்தக் கட்டளையையும் புகழ்பெறும் முறையில் நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு முயற்சியும் எடுப்போமென்று நாங்கள் உங்களிடம் உறுதி கூறுகிறோம்.......''

''தொழிலாளர் — விவசாயிகள் கூட்டுறவை பலப்படுத்துவதற்கு முழுச் சக்தியுடன் உழைக்க வேண்டுமென்று தோழர் லெனின் நமக்கு கட்டளையிட்டார். தோழர் லெனின் அவர்களே! இந்தக் கட்டளையையும் நாங்கள் நன்மதிப்பிற்குரிய முறையில் நிறைவேற்றுவோமென்று உங்களுக்கு வாக்கு கொடுக்கின்றோம்......''

''நம் தேசத்தின் தேசிய இனங்கள் தாமாகச் சேர்ந்து அமைத்துள்ள யூனியனைப் பாதுகாப்பதும், அவை சோவியத் யூனியன் அமைப்புக்குள் தோழமையுடன் ஒத்துழைப்பதும் அவசியமென்று தோழர் லெனின் இடைவிடாமல் வற்புறுத்தி வந்தார். சோவியத் குடியரசுகளின் யூனியனை உறுதிப்படுத்தி விஸ்தரிக்க வேண்டுமென்று நம்மை விட்டுப் பிரிந்த தோழர் லெனின் நமக்கு கட்டளையிட்டார். இந்தக் கட்டளையையும் நல்ல முறையில் நிறைவேற்றுவோமென்று, தோழர் லெனின் அவர்களே! உங்களுக்குப் பிரமாணம் செய்து தருகிறோம்......''

''செஞ்சேனையை பலப்படுத்துவதும் அதன் தரத்தை உயர்த்துவதும் கட்சியின் மிக முக்கிய கடமைகளில் ஒன்று என, லெனின் மீண்டும் மீண்டும் நமக்குச் சுட்டிக்காட்டினார். நமது செஞ்சேனையையும் சிவப்பு கடற்படையையும் பலப்படுத்துவதற்கு சகல முயற்சிகளும் எடுப்போமென்று நாம் உறுதிகொள்வோமாக......''

''கம்யூனிஸ்ட் அகிலத்தின் கோட்பாடுகளுக்கு விசுவாசமாய் இருக்கவேண்டுமென்று, நம்மை விட்டுப் பிரிந்த தோழர் லெனின் கட்டளையிட்டார். உலகம் முழுவதுமுள்ள உழைப்பாளர்களின் யூனியனான கம்யூனிஸ்ட் அகிலம் வலுவடைவதற்காகவும் விரிவடைவதற்காகவும் நாம் நமது உயிர்களையும் தியாகம் செய்யத் தயங்கோமென்று, தோழர் லெனின் அவர்களே! உங்களுக்கு உறுதிமொழி அளிக்கின்றோம்.''

ஸ்டாலின் இந்த சபதத்தை நிறைவேற்றினார் என்று சொல்லத் தேவையில்லை.

நோர்மன் பெத்யூனைப் பற்றி தோழர் மாசேதுங் 1939 டிசம்பர் 21ந் திகதி எழுதினார். அதை மீண்டும் நினைவு கூருவதற்காக அக் கட்டுரையை இங்கு பிரசுரிக்கின்றோம்.

# நோர்மன் பெத்யூன் ஞாபகார்த்தமாக

## மாசேதுங்

கனடா கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கத்தினரான தோழர் நோர்மன் பெத்யூன் கனடாவினதும் அமெரிக்காவினதும் கம்யூனிஸ்ட் கட்சிகளால் சீனாவுக்கு அனுப்பப்பட்டபோது அவருக்கு சுமார் ஐம்பது வயது இருந்திருக்கும். அவர் ஜப்பானுக்கு எதிரான பதில்— தாக்குதல் யுத்தத்தில் எமக்கு உதவி செய்வதற்காக ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்வதை பொருட்டாக கருதவில்லை. அவர் கடந்த வருட வசந்த காலத்தில் யெனான் வந்தடைந்து வூராய் மலைகளில் வேலை செய்யச் சென்று, எம்மை மிகுந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு கடமையாற்றிக் கொண்டிருந்த இடத்திலேயே தியாகியாக மரணமடைந்தார். சீன மக்களின் விடுதலை லட்சியத்தை தன்னுடைய லட்சியமாகவே கொள்ளும்படி ஓர் அந்நியரைச் செய்யும் இந்த உணர்வுதான் எத்தகையது? இதுவே சர்வதேசிய உணர்வு; கம்யூனிஸ உணர்வு. இதிலிருந்து ஒவ்வொரு சீன கம்யூனிஸ்டும் கற்றுக்கொள்ளவேண்டும். முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் காலனி, அரைக்—காலனி மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை ஆதரித்து காலனி, அரைக்—காலனி நாடுகளின் தொழிலாளி வர்க்கமும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தை ஆதரித்தால் மட்டுமே உலகப் புரட்சி வெற்றி பெற முடியும் என லெனினிஸம் போதிக்கிறது. தோழர் பெத்யூன் இந்த லெனினிஸ நெறியை நடைமுறைப்படுத்தினார். சீன கம்யூனிஸ்டுகளாகிய நாமும் எமது நடைமுறையில் இந்த நெறியை பின்பற்றவேண்டும். நாம் எல்லா முதலாளித்துவ நாடுகளினதும் தொழிலாளி வர்க்கத்தோடு ஜப்பான், பிரித்தானியா, அமெரிக்கா ஜெர்மனி, இத்தாலி மற்றெல்லா முதலாளித்துவ நாடுகளினதும் தொழிலாளி வர்க்கத்தோடு ஐக்கியப்பட வேண்டும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தை வீழ்த்தவும், எமது நாட்டையும் மக்களையும் விடுதலையாக்கவும், மற்ற நாடுகளையும் மக்களையும் விடுதலையாக்கவும் இது ஒன்றே வழி. இதுவே எமது சர்வதேசியத்துவம் — குறுகிய தேசியவாதம் குறுகிய தேசப்பற்று இரண்டையும் எதிர்க்க நாம் கைக்கொள்ளும் சர்வதேசியத்துவம்.

தோழர் பெத்யூனின் உணர்வு — தன்னைப் பற்றிய எண்ணமே இல்லாது அவர் பிறருக்கே முற்றும் அர்ப்பணமாயிருந்தது. அவர் தன் வேலையில் காட்டிய மிகுந்த பொறுப்புணர்விலும் சகல தோழர்களையும் மக்களையும் குறித்து அவர் காட்டிய மிகுந்த அன்பிலும் தெரிந்தது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். தங்கள் வேலையில் பொறுப்பின்றி, இலகுவானதை விரும்பி கடினமானதை இளக்கடித்துக்கொண்டும், சிரமம் மிகுந்தவற்றைப் பிறரிடம் தள்ளிவிட்டு தமக்கு சுலபமானவற்றை தெரிந்தெடுத்துக்கொண்டும் இருப்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவர்கள் பிறருக்கு முன்பாக தம்மை நினைத்துக்கொள்கின்றனர். இவர்கள்தாம் ஏதாவது சிறிய சேவையைச் செய்ததும் பெருமிதப்பட்டு பிறர் அதனை அறியாமல் போய்விடுவார்களோ என்ற பயத்தில் அதைப் பற்றிப் புளுகுகின்றனர். இவர்கள் தோழர்களிடத்திலும் மக்களிடத்திலும் அன்பு பாராட்டுவதில்லை. அன்பின்றியும், அக்கறையின்றியும் பராமுகமாயும் இருக்கின்றனர். இத்தகையவர்கள் உண்மையில் கம்யூனிஸ்டுகள் அல்லர். அல்லது குறைந்த பட்சம் தம்மை அர்ப்பணம் செய்துகொண்ட கம்யூனிஸ்டுகள் என கணிக்கப்பட முடியாதவர்கள். போர்முனையிலிருந்து திரும்பியவர்கள் எவரும் பெத்யூனின் பெயர் பிரஸ்தாபிக்கப்படும் போதெல்லாம் அவரை வியக்காதவர்கள் இல்லை. அவருடைய உணர்வைக் கண்டு உருகாதவர்களும் இல்லை. ஷான்ஸி—சாஹார்—ஹோபெய் எல்லைப் பகுதியில், டாக்டர் பெத்யூனால் சிகிச்சை செய்யப்பட்ட, அல்லது அவர் எவ்வாறு வேலை செய்தார் என்பதைக் கண்ணுற்ற சேனா வீரர்களோ, சாதாரண மக்களோ எவரும் மனம் உருகாதவர்கள் கிடையாது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தோழர் பெத்யூனிடமிருந்து இந்த உண்மையான கம்யூனிஸ்ட் உணர்வை கற்றுக்கொள்ள வேண்டும். தோழர் பெத்யூன் ஒரு டாக்டர். குணப்படுத்தும் கலை அவரது தொழில். அவர் தன் திறமையை இடையறாது வளர்த்தார். அவரது திறமை எட்டாம் மார்க்க சேனையின் வைத்திய சேவையில் மிக உயர்ந்து நின்றது. அவருடைய உதாரணம், வேறு விதமான ஒன்றைக் கண்டதும் தங்கள் வேலையை மாற்றிக்கொள்ள விரும்பாதவர்களுக்கும் தொழில் நுட்ப வேலையை முக்கியத்துவமற்றது என்றோ, அல்லது நல்ல வருங்காலத்துக்கு வாய்ப்புத் தராதது என்றோ வெறுக்கின்றவர்களுக்கும் ஒரு மிகச் சிறந்த பாடமாகும். தோழர் பெத்யூனும் நானும் ஒரு முறைதான் சந்தித்தோம். பின்னர் அவர் எனக்குப் பல கடிதங்கள் எழுதினார். நான் அதிக வேலையில் இருந்ததினால் அவருக்கு ஒரே ஒரு கடிதம்தான் எழுதினேன்; அதையும் அவர் பெற்றுக்கொண்டாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. அவரது மரணத்தையிட்டு நான் மிகவும் வருந்துகின்றேன். இப்போது நாம் எல்லோரும் அவரை நினைவு கூருகிறோம். அவரது உணர்வு எல்லோரையும் எவ்வளவு ஆழமாக ஊக்குவிக்கிறது என்பதை இது காட்டுகிறது. நாம் எல்லோரும் அவரிடமிருந்து முற்றிலும் தன்னலமின்மை உணர்வைக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த உணர்வு இருந்தால் அனைவரும் மக்களுக்கு மிகப் பயன்படலாம். ஒரு மனிதனின் திறமை பெரிதாயிருக்கலாம்; சிறிதாயிருக்கலாம். ஆனால், அவனிடம் இந்த உணர்வு இருந்தாலே போதும். அவன் உத்தமனும் தூயவனும் ஆகின்றான். பண்பில் வழுவாதவனும் சாதாரண விருப்புக்களை கடந்தவனுமாகிறான். மக்களுக்கு மதிப்புள்ள ஒரு மனிதனாகிறான்.

**குறிப்பு:** பிரபலமிக்க அறுவை வைத்தியர் தோழர் நோர்மன் பெத்யூன் கனடா கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கத்தினர். 1936ல் ஜெர்மன், இத்தாலிய பாசிஸக் கொள்ளையர்கள் ஸ்பெயினில் படையெடுத்தபோது அவர் போர்முனைக்குச் சென்று பாசிஸ விரோத ஸ்பெயின் மக்களுக்கு சேவை செய்தார். சீன மக்களுக்கு, அவர்களின் ஜப்பானுக்கு எதிரான பதில் தாக்குதல் யுத்தத்தில் உதவி செய்வதற்காக அவர் ஒரு வைத்திய கோஷ்டியின் தலைவராக சீனாவுக்கு வந்து, 1938ம் ஆண்டின் வசந்தத்தில் யெனான் சென்றடைந்தார். பின்னர் சில நாட்களில் ஷான்ஸி — சாஹார் — ஹோபெய் எல்லைப் பகுதிக்குச் சென்றார். தீவிர சர்வதேசிய உணர்விலும், கம்யூனிஸ உணர்விலும் ஊறியிருந்த அவர், கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் சேனைக்கும் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களின் மக்களுக்கும் சேவை செய்தார். அவர் காயமுற்ற வீரர்களுக்கு அறுவை சிகிச்சை செய்கையில் இரத்த விஷ பீஜம் தொற்றி ஹோபெய்யில் ராங்ஹ்ஸியென்னில் 1939 நவம்பர் 12ந் திகதி இறந்தார்.

# தோழர் ஸ்டாலின் கூறுகிறார்

"கம்யூனிஸ்ட்கள் எவ்வளவு நாட்களுக்கு மக்களுடன் பரந்த அளவில் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றனரோ, அதுவரையில் அவர்களை யாராலும் அசைக்க முடியாதென்பதை ஒரு விதியாகவே வைத்துக் கொள்ளலாம். எதிர்மறையில் கூறவேண்டுமேயானால், தங்களுடைய பலத்தை இழந்து ஒன்றுமில்லாத சூன்யமாக போல்ஷ்விக்குகள் ஆகவேண்டுமேயானால், ஜனங்களுடன் தங்களுக்குள்ள தொடர்பை அவர்கள் அறுத்துக் கொண்டுவிட்டால் போதும்; ஜனங்களுடன் தொடர்பிழந்தால் போதும்; அதிகார வர்க்கத் துருவினால் அவர்கள் தங்களை மூடிக் கொண்டுவிட்டால் போதும். கிரேக்க புராணத்தில் ஒரு மாவீரனைப் பற்றிய கதையொன்று இருக்கிறது. அவன் பெயர் அண்டேயஸ். சமுத்திரக் கடவுளாகிய பேஸிடனுக்கு, பூமாதேவியாகிய கேயேயிடம் பிறந்த மகன் என்று அக் கதை கூறுகிறது. அவனைப் பெற்றெடுத்து பாலூட்டி வளர்த்த அன்னையிடம் அவனுக்கு அதிக அன்பு. அவனால் வீழ்த்திக் கொல்லப்படாத வீரனெவனும் கிடையாது. யாராலும் வெல்லற்கரிய வீரன் என்று அவன் கருதப்பட்டான். அவனுக்கு அவ்வளவு பலம் எப்படி கிடைத்தது? சண்டையில் களைப்படையும் ஒவ்வொரு தடவையும் தன்னைப் பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்த்த அன்னையாகிய பூமியைத் தொடுவானாம்; உடனே மகத்தான பலத்தை அடைவானாம். இதில்தான் அவனுடைய பலம் அடங்கியிருந்தது. எனினும், அவனுக்கும் ஒரு பலஹீனமான இடமிருந்தது. பூமியை விட்டுப் பிரித்து தனிமைப்படுத்தப்படும் அபாயமே அது. அவனுடைய இந்த பலஹீனத்தை அவனுடைய எதிரிகள் தெரிந்து கொண்டுவிட்டனர். சமயம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர். இப் பலஹீனத்தைப் பயன்படுத்தி அவனைக் கொல்லுவதற்கு ஒரு விரோதி வந்தான். அவர்தான் ஹெர்குலஸ். ஹெர்குலஸ் அண்டேயஸை எப்படி தோற்கடித்தான்? அவனை அப்படியே பூமியிலிருந்து மேலே தூக்கினான்; பூமியைத் தொட முடியாதபடி ஆகாயத்திலேயே வைத்துக் கழுத்தை நெறித்துக் கொன்றான்.

கிரேக்க புராண வீரனாகிய அண்டேயஸை போல்ஷ்விக்குகள் ஞாபகப்படுத்துகின்றனர் என்று நான் நினைக்கிறேன். தங்களுடைய அன்னையுடன் தொடர்பு வைத்திருக்கும் வரையில், அண்டேயஸைப் போல் போல்ஷ்விக்குகள் பலசாலிகளாக இருக்கின்றனர். போல்ஷ்விக்குகளைப் பெற்றெடுத்து, பாலூட்டி போஷித்து, போதனை செய்து வளர்க்கும் தாய் வெகுஜனங்கள் தான். அவர்கள் தங்களுடைய அன்னையுடன் — வெகுஜனங்களுடன் — தொடர்பு வைத்திருக்கும் வரையில், போல்ஷ்விக்குகள் யாராலும் வெல்ல முடியாத வீரர்களாக விளங்குவதற்கு முழு சந்தர்ப்பமுண்டு.

"போல்ஷ்விக் தலைமையின் வெல்லமுடியாத பலத்திற்கு இதுதான் காரணம்."

# கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி ஸ்டாலின்

இந்தக் கட்சி ஒரு வர்க்க கட்சியாக இருக்க வேண்டும். இதர கட்சிகளை எவ்வகையிலும் சாராத சுயேச்சை கட்சியாக இருக்க வேண்டும். ஏனென்றால், இது தொழிலாளி வர்க்கத்தின் கட்சி. அந்த வர்க்கத்தின் விமோசனம் அதன் சொந்த முயற்சிகள் மூலமே கைகூடும்.

இது ஒரு புரட்சிகர கட்சியாக இருக்கவேண்டும். ஏனென்றால், புரட்சி முறைகள் மூலமே சோஷலிஸ்ட் புரட்சியின் உதவியாலேயே தொழிலாளர் விமோசனம் சாத்தியம்.

இது ஒரு சர்வதேச கட்சியாக இருக்க வேண்டும். வர்க்க உணர்வு பெற்ற ஒவ்வொரு தொழிலாளிக்கும் இந்த கட்சியின் கதவுகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் தொழிலாளரின் விமோசனம் ஒரு தேசியப் பிரச்சினையல்ல, சமுதாயப் பிரச்சினை. ஜார்ஜிய தொழிலாளிக்கும், ருஷ்ய தொழிலாளிக்கும் அதன் முக்கியத்துவம் ஒன்றே.

ஆகவே, பல்வேறு இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் எவ்வளவு அதிகமாக தோழமை உறவுகொண்டு நிற்கிறார்களோ, எவ்வளவு திட்டமாக தமக்கிடையே உள்ள தேசியச் சுவர்களை தூள் தூளாக்குகிறார்களோ, எந்த அளவு அதிகப் பலம் வாய்ந்ததாய் தொழிலாளர் கட்சி விளங்கும்; அந்த அளவு எளிதாக, தொழிலாளர்களை ஒரே வர்க்கமாக, பிரிக்க முடியாத வகையில் திரட்ட முடியும்.

# சோஷலிஸ யுகத்.....

◎ 5-ம் பக்கத் தொடர்

வங்களின் அடிப்படையில் அமைந்தது. சீன மக்களுக்கும், சோவியத் மக்களுக்கும் இடையில் உள்ள நட்புறவும் இதர பகுதி மக்கள் ஜனநாயகத்தின் உறவும், சமாதானத்தை விரும்பும் எல்லா ஜனநாயகவாதிகளின் தோழமையும், நீதி, நேர்மை, சமாதானம், சமத்துவம் ஆகியவற்றை விரும்பும் உலகம் முழுவதிலும் உள்ள ஜனநாயகவாதிகளின் நட்பும் இம்மாதிரியான-சர்வதேசிய பெரும் மூலத் தத்துவங்களின் அடிப்படையில் ஏற்பட்டது. ஆகையால் அதனை எவராலும் அசைக்க முடியாது.

இந்த நட்புறவினால் வெளிப்படும் சக்திகள் எல்லாம் எல்லையற்ற பலத்தை உடையதாகவும், அழிவில்லாததாகவும், உண்மையாகவே எவராலும் வெல்ல முடியாத ஒரு மாபெரும் சக்தியாக இருக்கும் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

நம்முடைய சிறந்த மகத்தான நட்புறவினால் எல்லா ஏகாதிபத்திய வெறியர்களையும், யுத்த வெறியர்களையும் நடுநடுங்கும்படி செய்வோமாக.

மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் போதனைகள் நீடூழி வாழ்க.

என்றும் மங்காத புகழ் பெற்ற மாமேதை ஸ்டாலின் நாமம் நிரந்தரமாக நின்று நிலவட்டும்.

சாகித்திய மண்டலப் பரிசு நூல்கள் — விமர்சனம்

# "முகை வெடித்த மொட்டு"

இலங்கை சாகித்திய மண்டலத்தின் நாவல் துறைக்கான பரிசு இவ்வாண்டு நவாலியூர். நா. செல்லத்துரையின் ''முகை வெடித்த மொட்டுக்'' குக் கிடைத்துள்ளது. நூலை வாசித்தபோது இது நாவல் தானு என்ருெரு ஐயமும் எழுந்தது. ஆனுல், புத்தகத்தின் அட்டையில் அடைப்புக் குறிக்குள் நாவல் - நெடுங் கதை எனப் போடப்பட்டுள்ளது. எனவே ஆசிரியரும் தான் நாவல் எழுதுவதாக நினைத்துக்கொண்டு தான் இந் நூலை எழுதியிருக்கிருர். ஆனுல், எழுதியவருக்கும் பரிசு கொடுத்த சாகித்திய மண்டலத்தினருக்கும் நாவல் எனும் இலக்கிய வடிவம்பற்றி அறிவு சூன்யமே.

பாலமுரளி என்னும் இளைஞன் பாரதி என்னும் பெண்ணை ரயிலில் சந்தித்தபோது காதல் கொள்கிருன். இருவரும் பெற்ருேரின் பூரண சம்மதத்துடன் திருமணம் செய்கிருர்கள். பாரதியின் மாமா தனது மனைவியைக் கவனிக்காமலிருப்பதைக் கண்டு அவரைத் திருத்துவதற்கு இருவரும் முயற்சி செய்கிருர்கள். ஆனுல், அவர்கள் முயற்சிகள் வீணுகின்றன. மதன் மோகனே (பாரதியின் மாமா) ஒரு பெண்ணைக் கற்பழித்துக் கொல்கிருன். இன்னெருத்தியைப் பைத்தியக்காரியாக்குகிருன்; வேருேர் பெண்ணை வேறு பெயரில் மணக்கிருன், இறுதியில் பாலமுரளியின் முயற்சியினுல் அவனது குற்றங்கள் வெளிப்படுகின்றன. அவன் ஒரு பெண்ணினுல் தாக்கப்பட்டு இறந்து போகிருன். அதற்கு முன் பாரதியும் தன்னுல் கற்பழிக்கப் பட்டவள் எனப் பாலமுரளியிடம் கூறுகிருன். பாலமுரளி இது கேட்டு மனங் குழம்புகிருன். பாரதி விபத்துக்குள்ளாகி இறந்துவிடுகிருள். இது தான் ''முகைவெடித்த மொட்டின்'' கதைச் சுருக்கம். (அது கதையானுல்) கதை என்பதைவிட வெறும் சம்பவங்களின் குவியல் என்றுதான் சொல்ல வேண்டும். சம்பவங்களிடையே ஒழுங்கோ இறுக்கமான கட்டுக்கோப்போ இல்லை. கற்பழிப்பும், கொலையும், கண்ணீரும், காதலும் வரவேண்டும் என்பதற்காக ஏதோவெல்லாம் மனம் போனபோக்கில் ஆசிரியர் எழுதித் தள்ளியிருக்கிருர்.

இந்நூலில் இலட்சியக் கதாநாயகனும், கதாநாயகியும் வருகிருர்கள் என முன்னுரையில் சொல்லப்படுகிறது, அந்த இலட்சியக் கதாநாயகன் வாசிக்கும் புத்தகம் பேசும் படம். கதாநாயகியோ எம். ஜி. ஆரின் படங்களைத் தவருமல் பார்ப்பவள். ஆசிரியரின் இலக்கியம் பற்றிய நோக்கும், இலட்சியம் பற்றிய தெளிவும் இதனுல் நமக்கு நன்கு தெரிந்துவிடுகின்றன. கலையைத் தமது பொழுது போக்கிற்கும், இன்பத்திற்குமாக்கும் வர்க்கத்திற்காக எழுதும் ஆசிரியன் இப்படித்தானே எழுதுவார். மலைநாட்டு மக்களின் அவல வாழ்வினைக் கண்டு கண்ணீர்விடும் சிலரில் ஒருவர் என அறிமுகப் படுத்தப்பட்டுள்ளார் செல்லத்துரை. அவற்றைக் கண்ணுல் கூடப் பார்த்திருப்பாரா என்ற சந்தேகந்தான் எழுகிறது.

தமிழில் வரும் மிக மோசமான திரைப்படங்கள் மிக மோசமான நாவல்கள் எல்லாவற்றிலும்வருகின்றமாமூலான வாய்ப்பாட்டுச் சம்பவங்கள் இங்கும் வந்து போகின்றன. ரயிலில் பாரதியிடம் (கதாநாயகி) வேறு ஒரு பிரயாணி சேட்டை செய்ய அவள் அடிக்கிருள். ஆனுல், பாலமுரளியுடன் முதற் சந்திப்பிலேயே ஒட்டியிருந்து கதை கேட்கிருள். அவன் புத்தகத்தைக் கொடுத்த போது கைபட்டதைத் தவறுதலாகப்பட்டது என நினைக்கிருள். (கதாநாயகளைப் பற்றி அப்படித்தானே நினைக்க வேண்டும். இல்லாவிடின் எப்படிக் காதல் வரும்?)

''தற்கால வாழ்க்கையின் அலங்கோலங்களை ஆசிரிார் அழகுறச் சுட்டியுள்ளார்'' என நூலுக்கு முன்னுரை வழங்கிய இரா. சிவலிங்கம் கூறுகின்ருர். எந்த விதத்தில், எந்த அடிப்படையில் தற்கால வாழ்வின் அலங்கோலங்களைச் சுட்டியுள்ளார் என்பதுதான் புரியவில்லை; இந் நூலில் ஆசிரியர் காட்டுகின்ற கற்பழிப்பு, கொலை என்னும் தற்கால வாழ்வின் அலங்கோலங்கள் கூட எவ்வித சமூக அடிப்படையிலும் ஆராயப்படவில்லை. சுருங்கச் சொன்னுல் தமக்குரிய தெளிவான சமுதாயக் களம் இல்லாமல் பாத்திரங்கள் நடமாடுகின்றன. கற்பழிப்பும் பல பெண்களைக் காமுறுவதும் புராண இதிகாச காலத்திலிருந்தே நடந்துவருகிற நிகழ்ச்சிகள்தாம். இங்கு இவற்றை இக்காலத்தனவாக இனங்காட்டக்கூடிய சமுதாய அம்சம் ஒன்றுமேயில்லை. பெயர்களை மாற்றிப் போட்டால் மட்டும் நூலில் தற்காலம் நுழைந்துவிடாது. ஈழத்து எழுத்தாளர் ஒருவரின் நாவல் என்பதற்கு எதுவித அடையாளமும் இல்லை-ஆசிரியர் இலங்கையர் என்று புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிரும்பதைத் தவிர. ஈழத்து வாழ்வைப் பிரதிபலிக்கும் சம்பவங்களோ, பாத்திரங்களோ, உரையாடலோ இங்கிருக்கும் என்று யாராவது தேடினுல் அவரின் தேடல் முடியாத தேடலாகத்தானிருக்கும். கொழும்பு-ஹவ்லொக் டவுண் எனவும், கண்டி, யாழ்ப்பாணம் எனவும் குறிப்பிட்டு விடுவதால் மட்டும் ஒரு நூல் ஈழத்து நாவலாவதில்லை, அவை வெறும் பெயர்களே.

ஒரு இலக்கிய வடிவத்திற்கு உருவம், உள்ளடக்கம் என இரு பிரதான அம்சங்கள் உள்ளன. உள்ளடக்கத்தைப் பொறுத்தே உருவமும் வந்தமைகின்றது. இங்கு உள்ளடக்கம் திடமற்று, வலுவற்று இருப்பதால் உருவமும் சிதறுண்ட துண்டுகளின் தாறுமாருன சேர்க்கை போலத் தோன்றுகிறது. நூலின் முக்கிய கதாம்சம் எது என்று சொல்லமுடியாமல் பல்வேறு சம்பவங்கள் குவியல்களாகக் காட்சியளிக்கின்றன. இவை போதாதென்று, கலையழகே இல்லாத செயற்கையான ஆடம்பர உரையாடல்கள் வேறு தமது பங்கைச் செய்கின்றன. ''......யார் அதற்குக் குற்றவாளி? கேளுங்கள் உங்கள் உள்ளத்தை, கேட்டு விட்டுத் தாருங்கள் உங்கள் கருத்தை'' இப்படியான பாத்திரங்கள் மூச்சடைக்கப் பேசும் வசனங்கள் இங்கு சர்வ சாதாரணம்.

எந்த அடிப்படையில் சாகித்திய மண்டலப் பரிசு இந் நூலுக்கு கிடைத்ததென்பது பரிசு கொடுத்த வர்களுக்கும், பெற்றவர்களுக்கும்தான் வெளிச்சம். ஆனுல், நிச்சயமாக இலக்கியத் திறனுக்கோ கதைக்கோ அல்ல என்பதை இதனை வாசிப்போர் உணர்ந்துகொள்வர். இதற்குப் பரிசு கிடைத்திருக்கிறது என்பதை எண்ணும்போது எவரும் ஆத்திரத்துக்குள்ளாகாமல் இருக்க முடியாது.

ஏனைய நாடுகளில் ஈழத்தின் நாவலிலக்கிய நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாய் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இந் நூல் செல்லும் போது என்ன நடக்கும்? உண்மையான இலக்கிய நிலையை இது பிரதிபலிக்குமா? ஈழத்து நாவலிலக்கியம் நோய் பிடித்தது; அசிங்கமானது;அது வளரவேயில்லை என்ற படு தவருன கருத்துக்களைத்தான் ஏற்படுத்தும். 'முகைவெடித்த மொட்டு' கருகிய மொட்டாக ஈழத்து இலக்கிய நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்தும்.

தமிழ் நாவலிலக்கியத்தைப் பொறுத்தவரை சமுதாய உணர்வுடனும், கலையழகுடனும் கூடிய தரமான நாவல்களைச் சமீபகாலத்தில் தந்தது ஈழந்தான். ஆனுல், சாகித்திய மண்டலப் பரிசு இந்த உண்மையைச் சொல்ல முடியாது.

சாகித்திய மண்டலம் மரபு வழி வழுக்கைத் தலைகளும்-இலக்கியத்தைப் பற்றி ஏது மறியாமல் வேறும் செல்வாக்குகளினுல் அங்கத்துவம் பெற்ற படு பிற்போக்குவாதிகளும் நிறைந்த ஒரு கும்பல். அது இந்தக் கருகிய மொட்டுகளுக்குத்தான் பரிசு தரும். நூலைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஆசிரியர் எழுதிய ஒரு சிறு கதையின் தலைப்புடனேயே நமது விமர்சனத்தை முடித்தும் கொள்ளலாம். ''விடுங்கள், அவன் போகட்டும்.''

ராதை

## மாறு மனிதா மாறு

### "ஆறு மனமே ஆறு இந்த ஆண்டவன் கட்டளை ஆறு" என்ற மெட்டு

மாறு மனிதா மாறு முற்போக்கு வழியில் மாறு
தேடும் மனிதன் சுரண்டப்பட்டு வாடி நிற்பதைப் பாரு
(மாறு மனிதா)

உடுத்த கந்தல் குடிக்க கஞ்சி கிடைப்பதில் என்ன நியதி
நாற்றம் வீசும் லயத்தில் வாழும் ஏழை வாழ்வில் அநீதி
துரையின் பங்களா சொர்க்கலோகம் அதைச் சுற்றி
பூங்கா நந்தவனம்
இந்த இரண்டு நிலையும் அறிந்து மனதில் தெரிந்து
சொல்வது நன்ருகும்
(மாறு மனிதா)

உழைத்த நீயும் களைப்பினிலே படுத்துறங்கும் போது
உன்னை அழைப்பது போல் அறிகுறியாம் சங்கொலியும்
கேட்கும்
முந்திப் போனுல் தென்பாகும் கொஞ்சம் பிந்திப் போனுல்
வம்பாகும்
இதன் படியே வேலை செய்தும் சோறு கிடைப்பதும்
சந்தேகம்
சோறு கிடைப்பதும் சந்தேகம்
(மாறு மனிதா)

உழைக்கும் உனக்கு உடம்பைத் தவிர உலகத்தில் ஏது
சொந்தம்
அடிமைத் தளையை அறுத்தெறிந்தால் அகிலம் உனக்குச்
சொந்தம்
உழைப்பு உனக்கு பொன்னுகும் தீய சுரண்டல் அதற்குப்
புண்ணுகும்
இந்த இரண்டு நிலையும் அறிந்து மா ஓ சொல்லியிருப்பது
பொன்னுகும்
(மாறு மனிதா)

## சரித்திரம் என்றும்...

3-ம் பக்கத் தொடர்

சினேவியேவிஸ்டுகளுக்கும், புகாரினிஸ்டுகளுக்கும் மற்றும் முதலாளித்துவ ஏவலாலர்களுக்கும் எதிரான போராட்டத்தில் தோழர் ஸ்டாலின் மார்க்சிஸம் — லெனினிஸத்தைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்துள்ளார்.

அமரத்துவம் வாய்ந்த மார்க்சிஸம் — லெனினிஸ சிருஷ்டிகளான பல தத்துவக் கட்டுரைகளில் தோழர் ஸ்டாலின் சர்வதேச கம்யூனிஸத்திற்கு அழிக்க முடியாத ஒரு சேவையை ஆற்றினுர்.

முழுமையாகப் பார்க்கும் போது, தொழிலாளி வர்க்க சர்வதேசியத்துடன் இணங்கிய ஒரு வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதிலும், சீன மக்களுட்படச் சகல மக்களினதும் புரட்சிகரப் போராட்டங்களுக்குப் பெருமளவு உதவி செய்வதிலும் சோவியத் கட்சியையும், அரசாங்கத்தையும் தோழர் ஸ்டாலின் வழிநடத்தினுர்.

தோழர் ஸ்டாலின் போராட்டங்களுக்கு வழிகாட்டியபடி வரலாற்றுப் பிரவாகத்தின் முன்னணியில் நின்ருர்; ஏகாதிபத்தியவாதிகளுக்கும், சகல பிற்போக்காளர்களுக்கும் சற்றும் விட்டுக்கொடுக்காத அவர்களின் பரம எதிரியாகத் திகழ்ந்தார்.

தோழர் ஸ்டாலினுடைய நடவடிக்கைகள், மகத்தான சோவியத் மக்களது போராட்டங்களுடன் நெருங்கிப் பிணைந்திருந்தன; முழு உலகிலுமுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களிலிருந்தும் பிரிக்கமுடியாதவையாக இருந்தன.

தோழர் ஸ்டாலினுடைய வாழ்வு ஒரு மகத்தான மார்க்சிஸ்ட் — லெனினிஸ்ட்டின், ஒரு மகத்தான பாட்டாளி வர்க்க புரட்சியாளனின் வாழ்வாகும்.''

## லெனினுக்கு ஸ்டாலின் எழுதிய கடிதம்

நாடு கடத்தப்பட்டு, ஊருக்குள் அடைபட்டிருந்த ஸ்டாலின் லெனினுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறினுர்: ''எனக்கு இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றன. அந்தக் காலம் முடிந்து விட்டால் உங்கள் இஷ்டப்படி என்னைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஊழியர் தேவை உண்மையிலேயே அதிகமாயிருந்தால் நான் உடனேயே காவலிலிருந்து தப்பி விடுவேன்.''

## துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்

# தொழிற்சங்க கூட்டு முன்னணியின் அறிக்கை

துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்தில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைநிறுத்தத்திற்கெதிராக, அரசாங்கம் மீண்டும் ஒருமுறை நிரந்தர இராணுவ படைகளையும், தொண்டர் படைகளையும் கட்டாய ரீதியில் கருங்காலி வேலைகளின் பொருட்டு உபயோகித்துள்ளது. இவ் வேலை நிறுத்தத்தால், குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், உரப் பொருட்களையும் இறக்குமதி செய்தல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளபடியால், செய்வதற்கு ஒன்றுமில்லாமல் இவ்வாறு இராணுவத்தை அரசாங்கம் ஈடுபடுத்தியுள்ளதென விளக்கம் காட்டப்பட்டுள்ளது. இவ் வேலைநிறுத்தத்திற்கு தூண்டுகோலான காரணம் என்ன என்பதையும், கருங்காலிகளை உபயோகித்து வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்குப் பதிலாக, ஜனநாயக ரீதியிலும் நியாயமான முறையிலும் வேலைநிறுத்தத்தை விரைவில் ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்று அரசாங்கம் முடிவுசெய்தால், வேலைநிறுத்தத்தை தீர்த்து வைப்பது எவ்வாறு என்பதை பொது மக்களுக்கு விளக்கிக் காட்டுவது சாலச் சிறந்தது என்பது எமது நோக்கமாகும்.

துறைமுக கூட்டுத்தாபனத்தின் ஏழு தொழிற் சங்கங்களைக் கொண்ட தொழிற் சங்க கூட்டு முன்னணியினால் தினச் சம்பளம் பெறும் தொழிலாளர்கள், மாதாந்த சம்பளம் பெறும் லிகிதர்கள், நிர்வாக இணைப்பு தராதரங்களினதும் கோரிக்கைகள் தொடர்பாக (கொழும்பு) கூட்டுத் தாபன அதிகாரிகளுக்கு கூட்டாக சமர்ப்பிக்கப்பட்டு சரியாக மூன்று மாதங்களின் பின்னர், 12-12-69 முதல் கொழும்பு, திருகோணமலை துறைமுகங்களில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

இப்போது துறைமுக ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் சம்பளம், அரிசிவெட்டு, நாணய மதிப்பு குறைப்பு, வெளிநாட்டுச் செலாவணி அத்தாட்சி பத்திரம் போன்ற நடவடிக்கைகளுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டதாலும், மேற்படி நடவடிக்கைகளின் பிரதிபலனாக மக்களது வாழ்க்கைச் செலவு தொடர்ந்து அதிகரித்திருப்பதாலும் இவைகளை சமாளிக்கத்தக்க வகையில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் சகல தராதரத்தினருக்கும் திருத்தியமைக்கப்பட்ட சம்பள உயர்வுடன் மாதாந்தச் சம்பளத் திட்டமொன்றினை உருவாக்க வேண்டுமென்பது சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் அடிப்படைக் கோரிக்கையாகும்.

இக் கோரிக்கைகளைப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும்அதேபோன்று எத்தகைய அரசியல் கட்சிகளில் சாராதவர்களுமான தொழிற் சங்க தலைவர்கள் தலைமையில் இயங்கும் சங்கங்கள் முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதுடன், இவ் வேலை நிறுத்தத்தை எதிர்க்கும் ஐக்கிய தேசிய கட்சியினதும், லங்கா சமசமாஜ கட்சியினதும் தொழிற் சங்கங்களைச் சார்ந்த பெருந் தொகையான அங்கத்தவர்களும் இவ் வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ளார்கள்.

2-12-69ல் 7 தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியில் பிரதான கோரிக்கைகள் பற்றி கூட்டுத்தாபனத்துடன் 10-12-69 வரை சமரசம் ஏற்படாவிட்டால் அத் திகதிக்குப் பின் வேலை நிறுத்தம் செய்வதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதற்கு பிறகு தேசியமய சேவை அமைச்சினால் துறைமுக கூட்டுத்தாபன தலைவர், உபதலைவர், கூட்டுத்தாபன அதிபராகக் கடமையாற்றும் திறைசேரி பிரதிநிதி ஆகியோரைக் கொண்ட கூட்டுத்தாபன கமிட்டிக்கு கொழும்பு துறைமுக கூட்டுத்தாபனத்தைச் சார்ந்த 7 தொழிற் சங்கங்களின் கூட்டு முன்னணியின் கோரிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்த அனுமதியளித்தது. 17-10-69ல் கொழும்பில் நடத்தப்பட்ட 7 தொழிற் சங்கங்களின் ஐக்கிய கூட்டத்தின் தீர்மானப்படி, சமர்ப்பித்த கூட்டுக் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கு அறிவித்தல் கொடுத்திருந்த மூன்று வாரங்கள் காலாவதியாகி மேலும் ஆறு வாரங்கள் சென்ற பின்னர்தான் மேற்படி திர்மானம் எடுக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே தேசியமயசேவை அமைச்சிற்கும் அதன் கட்டளைக்கிணங்க கடமையாற்றி வந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கும் 2-12-69 ஆரம்பித்த மேலதிக வேலை பகிஷ்கரிப்பதெனவும், 12ம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்வதைத் தொடர்ந்து நடத்துவதற்கும், இத் தினங்களில் துறைமுக தொழிலாளர்கள் ஐக்கிய கூட்டங்களில் தீர்மானம் செய்வதற்கு முன்னர் கூட்டு முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளைத் தீர்த்துவைக்க சகல ரீதியிலும் சந்தர்ப்பமளிக்கப்பட்டிருக்கின்றதென்பது தெளிவாகின்றது. திருகோணமலை துறைமுகத்திலும் இந்த ரீதியிலேயே வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. காலி துறைமுகத்திலும் இதே போன்று தீர்மானம் எடுக்கப்பட்டது. அங்கு இப்போது கப்பல் இல்லாமையால் அத் தீர்மானத்தை இதுவரை நடைமுறையாக்கவில்லை.

வேலைநிறுத்தம் செய்யாது இக் கோரிக்கைகளை பெறுவது சாத்தியமற்றது மாத்திரமல்ல திருகோணமலை — கொழும்பு துறைமுக தொழிற் சங்கங்களின் கூட்டு முன்னணிகள் தங்களின் பொறுமையை இழக்க நேர்ந்தது. ஏனெனில் துறைமுக கூட்டுத்தாபன சபை துறைமுக தொழிலாளர்கள் சகலருக்கும் மாதாந்தச் சம்பளம் அளிப்பது தொடர்பாக பயனளிக்கத்தக்க வகையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க எத்தகைய திட்டவட்டமான பிரேரணையையும் சமர்ப்பிக்கத் தவறியமையே.

ஏழு தொழிற் சங்கங்களைக் கொண்ட கூட்டு முன்னணியினால் கூட்டுத்தாபனத்திற்குக் கொடுக்கப்பட்ட இறுதி அறிவிப்பு காலாவதியாக ஒரு நாளுக்கு முன்னர் அதாவது 9. 12. 69ல் கூட்டுத்தாபன தலைவர் கூட்டு முன்னணியின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். கூட்டு முன்னணியின் முக்கிய கோரிக்கைகளின் மீது தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த திட்டவட்டமான பிரேரணைகளைக் கொண்ட அமைச்சினது அங்கீகாரத்தை கூட்டுத்தாபனம் பெறும் என்ற சாத்தியக் கூறுகள் பேச்சு வார்த்தைகளின் போது பயன்பட்டன. இந் நிலையில் அடுத்த நாள் முன் வைக்கப்பட்ட சம்பளத் திருத்த கோரிக்கையை அமுலாக்குவது தொடர்பாகவும் நாளாந்தச் சம்பளம்பெறும் தராதரத்தினரினது மாதாந்தச் சம்பள கோரிக்கையை அமுலாக்குவது தொடர்பாகவும் திருப்திகரமான முடிவு ஏற்பட்டால், 12. 12. 69ல் நடைபெற்ற கூட்டு முன்னணியின் கூட்டத்தில் உத்தேச வேலை நிறுத்தத்தை ஒத்தி வைக்கும்படி பிரேரிக்க ஆயத்தமாக இருப்பதாகவும் கூட்டு முன்னணியின் பிரதிநிதிகள் பிரகடனஞ் செய்தனர். கூட்டு முன்னணியின் பிரதிநிதிகளின் பிரேரணைகளின்படி சிபாரிசு செய்ய முடியுமா என்பதை அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னர் தெரிவிப்பதாக உப தலைவர் முன்னிலையில் தலைவர் வாக்குறுதியளித்தார்.

துரதிர்ஷ்டவசமாக, 10. 12. 69ல் கூட்டு முன்னணியின் பிரதிநிதிகள் தலைவரைச் சந்தித்தபொழுது, தாம் முன்னர் கேட்டு கொண்டபடி எத்தகைய திட்டவட்டமான சிபாரிசுகளையும் முன்வைக்கக் கூடியநிலை சபைக்கு இல்லையென குறிப்பிட்டார். வழக்கம் போல் வேலைகள் செய்யப்பட்டு வந்தால், மாதாந்தச் சம்பளத் திட்டமொன்றினை அமுலாக்குவது சம்பந்தமாக 20. 12. 69க்கு முன்னர் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமென்பதை கூறுவதற்கு மாத்திரமே சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இன்றைய வேலை நிபந்தனைகளை மாற்றியமைக்காது, எத்தகைய ரீதியில் மாதாந்தச் சம்பளத் திட்டத்தை அமுலாக்குவது என்ற பிரச்சினையை முற்றிலும் தெளிவற்ற நிலையில் கைவிடப்பட்டது. சம்பளத் திருத்தம் பற்றி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த குறைந்தபட்சத் திட்டம் என்ன என்பதுபற்றி எத்தகைய குறிப்பும் கிடைக்கவில்லை.

துறைமுகக்கூட்டுத்தாபனத்திற்கும், தொழிற் சங்க கூட்டு முன்னணிக்கும் இடையே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் பொருட்டு திட்டவட்டமான-திருப்திகரமான சிபாரிசுகள் சமர்ப்பிப்பதன் வாயிலாக கொழும்பு திருகோணமலை துறைமுக அலுவல்களை வழக்கமான நிலைக்குக் கொண்டுவர வேண்டுமா அல்லாவிடில் தொழிற் சங்க கூட்டு முன்னணிக்கு தீர்த்து வைக்கும் பொருட்டு எத்தகைய சிபாரிசும் சமர்ப்பிக்காமல், இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள, கருங்காலிகளின் வாயிலாக துறைமுகத்தின் வரையறுக்கப்பட்ட சில அலுவல்களை செய்வதா என்ற பிரச்சினையைத் தீர்மானிக்கும் பொறுப்பை நாங்கள் பொது மக்களிடம் ஒப்படைக்க விரும்புகின்றோம்.

கொழும்பு திருகோணமலை துறைமுகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களும், தொழிலாளர் தரங்களைச் சாராத பெருந் தொகையான ஊழியர்களுக்கும் இப் பிரச்சினை சம்பந்தமாக திட்டவட்டமான கொள்கையொன்றனை கடைபிடித்து வருகின்றனர். இக் காரணத்தை முன்னிட்டுதான் இவர்கள் வேலைநிறுத்தத்திலீடுபட்டிருக்கின்றனர். வேலை நிறுத்தத்தை நீடிக்கச் செய்து, பல்வேறு சூழ்ச்சிகளைக் கையாளுவதன் மூலம் வேலை நிறுத்தத்தை முறியடிக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்குப் பதிலாக, வேலை நிறுத்தத்தை சுமுகமான முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென அரசாங்கம் முடிவுசெய்யும் வரை இவ் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடத்தப்படும்.

## புரட்சிகரத் தலைமையின் கீழ் தொழிலா.....

◎ 1-ம் பக்கத் தொடர்

வித்து வருகின்றனர். நாட்டில் பெருகிவரும் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க முடியாத சீர்கேடான நிர்வாக அமைப்பு பொலிஸ் குண்டாந் தடிகளைப் பாவித்து, பல்கலைக் கழகங்களை மூடி மாணவர்களின் கொந்தளிப்பைத் தீர்க்க முனைகிறது.

தமது பல்கலைக் கழக படிப்பு முடிந்த பின் இருண்ட எதிர்காலத்தை மாணவர்கள் எதிர்நோக்குவதன் பிரதிபலிப்பே மாணவர்களின் இன்றைய கொந்தளிப்பாகும். 21 வருட ''சுதந்திர''த்திற்குப் பின்னரும் அந்நிய ஏகாதிபத்தியத்தினால் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தப்பட்டு தேய்ந்து வரும் பொருளாதாரத்தின் விளைவுதான் இவை என்பதை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஏகாதிபத்திய-நிலப் பிரபுத்துவ-பெரும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பையும், அதனைப் பாதுகாக்கும் அரசு யந்திரத்தையும் தவிடு பொடியாக்காமல் தமக்கு ஒருவித எதிர்காலமும் இல்லையென்பதை அவர்கள் உணர வேண்டும். அதே போன்று இக் கடமையை தம்மால் மட்டும் தனித்து செய்ய முடியாதென்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ! தொழிலாளர்களுடனும், விவசாயிகளுடனும் மற் தேசபக்த சக்திகள் அனைத்துடனும் ஐக்கியப்படுவதனால் மட்டுமே அவர்கள் இந்த லட்சியத்தை அடைய முடியும்.

இன்றைய தொழிலாளர்களின் எழுச்சியும், மாணவர்களின் கொந்தளிப்பும் சகல புரட்சிகர சக்திகளையும் ஐக்கியப்படுத்தி அந்நிய ஏகாதிபத்திய-நிலப்பிரபுத்துவ - பெரும் முதலாளித்துவ வர்க்கத்தை ஒரேயடியாக நிரந்தரமாக அழித்தொழிப்பதற்கு சரியானதொரு தலைமையை வழங்க முடிந்த புரட்சிகரத் தலைமையொன்றின்கீழ் ஒன்றுபட்டால் மாத்திரமே இப்போராட்டங்களை மேலும் முன்னெடுத்துச் செல்லலாம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2